# ஜகன் மோகினி

11

மார்ச்
1954

JAGAN MOHINI

அணா
நான்கு

1 APR 1954

வை.மு.கோ.

110-வது நவீனம்

## புனித பவனம்

நாளது ஜய வருஷ
தமிழ்ப் புத்தாண்டுப்
புதுமலராக வெளிவரும்.

13-4-1954 விலை ரு. 2.

# பொய்கையில் சில புது மலர்கள்

[இம் மலர்களை ஒரு சிறு மாலையாக்க முயன்றேன்; இவற்றைச் சேர்த்துக்கட்டிய நார்தான் நான்!]

## 1. மலரோ, விளக்கோ!

வையம் தகளியா, வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன்—'விளக்கு'

பொய்கையாழ்வார் கண்ட சூரியவிளக்கு இது. காஞ்சிபுரத்தில் தோன்றியஇவர் அந்தப் பல்லவராஜதானியின் கடற்கரைப் பட்டினமாக இருந்த மாமல்லபுரத்திலும், (இப்போது மகாபலிபுரம்) அப்பல்லவ மகாராஜ்யத்தின் அழகு நிலயமான மயிலையைச் சார்ந்த திருவல்லிக்கேணிக் கடற்கரையிலும் இத்தகைய சூரியோதயத்தை எத்தனையோ தடவை பார்த்துப் பரவசமாயிருக்கவேண்டும் எனக் கருதுவது மிகையாகாது.

எந்த இருட்டில் இந்தச் சூரியோதயப் பாட்டைப் பாடினாலும் அந்த இருளூடு வந்து இச் சூரியவிளக்கு நம் மருளைப் போக்க உதவும்.

திருக்கோவலூர் இடைகழியில் பெருமழையோடு கூடிய கள்ளிரவில் இச்சூரியவிளக்கைப் பொய்கையார் ஏற்றிவைக்க, மூவரும் தம்மை நெருக்கிய கள்ளனைக் கண்டுகொண்டனர் என்பர்.

அன்றுபோல் இன்றும் அறியாமையாகிய பெருத்த இருளுக்கும் விபரீத நாஸ்திக அறிவாகிய கனத்த மழைக்கும் இடையே உதவக்கூடிய மங்களவிளக்கு இது.

## 2. சூடும் குளிர்ச்சியும்

'உருவம். எரி, கார் மேனி ஒன்று'

ஒருவனுடைய உருவம் எரியும் தீ; மற்றொருமேனி, கார் மேகம். ஒன்று சூடு; மற்றொன்று குளிர்ச்சி, சூடும் குளிர்ச்சியும் அளவுடன் அமைந்திருப்பது உலகம். இக்கால நிலைக்கு இசைந்தவாறு சைவவைணவ சமரசம் காண்பது நன்றே என்பது என் கருத்து.

சிவனும் உட்பட எல்லாவற்றையும் சரீரமாக உடைய திருமாலின் கார்மேனி என்பது ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தம். திருமாலை இஷ்டதெய்வமாகக் கொண்டிருக்கும் ஆழ்வார்களின் கொள்கையும் இதுவே எனக் கருதலாம். இது ஒருபுறம் இருக்கட்டும். எனினும் சமரசம் காண்பது இன்றைய மனப்போக்கிற்கு இன்றியமையாததே.

'மாமதிள் மூன்று எய்த இறையான் நின் ஆகத்து இறை' —அதாவது பெரிய மதிலையுடைய முப்புரங்களை எய்து தொலைத்த இறைவனும் உன் திருமேனியிலுள்ள இறைவன்தான்—என்பது பொய்கையார் வாக்கல்லவா?

'கங்கையான் நீள் கழலான் காப்பு' என்று முடிகின்ற பொய்கையார் வாக்கும் சமரசம் காட்டுவதே எனக் கருதலாம்.

இப்படியே இந்த ஆழ்வார் வாக்கிலும் முதலாழ்வார்களில் மற்றையோரான பூதத்தார் பேயார் வாக்கிலும் சமரசச் சான்றுகள் காணலாம். இன்றைய தேவை சமரச சன்மார்க்க மல்லவா?

### 3. வாய் படைத்த பயன்.

இரண்டு செவிகளும் ஒரு வாயும் இருப்பதற்கு உட் பொருள், கேள்வி அதிகரிக்க வார்த்தை சுருங்க வேண்டும் என்பர்.

"வாய் அவனை அல்லது வாழ்த்தாது"

என்பர் பொய்கைப்பிரான்.

'உருவொடு பேரல்லால் காணு கண், கேளா செவி' என் றும்கூறுவர். இறைவன் திருவுருவை அன்றி வேறொன்றையும் கண்கள் காணமாட்டா என்பதும், திருநாமத்தையன்றி மற் றெதையும் செவிகள் கேட்கமாட்டா என்பதும் பொருள். கைகள் அவனையல்லது வேறு எவனையும் தொழமாட்டா என்றும் இப்பாட்டிலே இந்த ஆழ்வார் அருளிச் செய்வர்,

எல்லாவற்றுக்கும் முதன்மையானது வாயைக் காப்பது —அதாவது நாவைக் காப்பது. இந்த நாவை உதடுகளும் பற்களுமாகிய இருமதிலுக்கும் அப்பால் வைத்திருந்தும், இது அடங்காப் பிடாரியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறதே என்று பரிதவிப்போருண்டு.

நாவினால் அகாரியமான சொல் ஒன்றும் வெளிப்படாத வாறு பண்பட்ட பெரியோர் திருக்கோஷ்டியூரில் வாழ்ந்த தாகப் பெரியாழ்வார் கூறுவர். ராமராஜ்யத்திலே நாவை உண்மை பேசுவதற்கும் நல்ல நூல்களை ஓதுவதற்குமே பயன் படுத்திக்கொண்டனர் என்பர் கம்பரும்.

எதைக் காக்கவில்லை யென்றாலும் நாவைக் காக்க வேண்டும் என்பர் திருவள்ளுவர். உண்ணு நோன்பும் மௌன விரதமும் காந்தியடிகளின் சத்தியாக்கிரக வாழ்வில் இடம் பெற்றுள்ளன அல்லவா?

### 4. கண்ணீரின் சக்தி

இயற்கை யழகிலும் இறை யழகு காண்போர் இவ்வுலக வாழ்விலும் சுவை கண்டு இன்புறுவர்.

இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்

என்ற மன நிலையும் பக்தருக்கு வாய்க்கும்.

இன்றைய சூழ்நிலையில் நாஸ்திகப் பேரிருளில், சமரச சன்மார்க்க விளக்கைத் தூண்டிவிடுவதே நலமாகும். வீண் வாதங்களுக்கு வாயை உபயோகித்துக் கொள்ளாமல் எல் லாருக்கும் பொதுவான இறைவனை வாழ்த்துவதற்குப் பயன் படுத்திக் கொள்வதே நல்லது.

இந்த வாழ்க்கை முறையில் தவறு நேர்ந்தாலும், பொழுதெல்லாம் அவப் பொழுதாய்ப் போகிறதே என்ற உணர்ச்சி ஏற்பட்டாலும், 'என்ன பலவீனம்! இந்த அசக்திக்குத் தோற்றேன்!' என்று ஓய்ந்திருக்கலாகாது.

பழுதே பலபகலும் போயினஎன(று) அஞ்சி
அழுதேன் ; அரவணைமேல் கண்டு—தொழுதேன்

என்ற பொய்கை வாக்கு ஓர் அருமையான வழிகாட்டி.

கழிவிரக்கம் கொண்டுவரும் கண்ணீரே கழுவாயாகும். அஞ்சவேண்டாம்; பச்சாத்தாபக்கண்ணீருக்குமிஞ்சினபிராயச்சித்தமில்லை யென்று ஸம்ஸ்கிருதம் கலந்து பரிமாறிவிட்டால் புரிந்து போகிறதல்லவா? (இந்தத் தூய தமிழ்—வடமொழி விவகாரத்திலும் சமரசமே சன்மார்க்கம்!)

## 5. ஓதி உருவேற்றினால் போதுமா ?

பிராயச்சித்த மென்பது மந்திர தந்திரங்களையும் காயக் கிலேசங்களையும் கிரியைகளையும் குறிப்பது தான் எனக் கருதுவது தவறு. உள்ளுருகிக் கண்ணீர் பெருக்கும் பிராயச்சித்தத்திற்கு மேற் கூறியவை ஈடல்ல.

ஜபம் செய்வதும், மந்திரங்களை உருவேற்றுவதும், சந்தியா வந்தனம் முதலான கர்மானுஷ்டானங்களைக் காலந் தவறாமல் அனுஷ்டிப்பதும் புருஷார்த்த ஸித்திக்குப் பயன் படா என்பது பொய்கையார் கொள்கை:

புந்தியால் சிந்தியா(து) ஓதி உருஎண்ணும்
அந்தியால் ஆம்பயன் அங்கு என் ?

பகவந் நாமங்களின் உட்பொருளைப் புத்தியோடு சிந்திக்கும் பகவத் பக்தியே வாழ்க்கைக்கு நற்றுணை. மற்றப்படி வாயை வீணாக மொணமொணத்துக் கொண்டும் அலட்டிக் கொண்டும் பிறரைப் பிரமிக்கச் செய்வதற்கும் தன்னுள்ளத்தையே பகட்டிப் பிரமிக்கச் செய்வதற்கும் பயன்படுவதுதான் என்பது ஆழ்வார் கருத்து.

இப்பெருங் கொள்கையை ஒரு வழிகாட்டியாகக்கொண்டு இந் நாளில் ஏறக்குறையச் சடங்கு மதமாகவே காணப்படும் நம் இந்து மதத்தைச் சீர்திருத்திக்கொள்வது அவசியமாகும். இது அவசரமான காரியமுமாகும்.

சடங்கு மதமன்று, பக்தி மதம்தான் இன்றைய தேவை. எண்ணிறந்த சடங்குகளுக்கிடையே சமய உணர்ச்சியே மூச்சுத்திணறிப் போகக்கூடுமல்லவா ?

## 6. அந்தச் செல்வம் தேட இந்தச் செல்வம் தானே வரும் !

சடங்குவாதிகள் சொல்லக்கூடும்: 'மனமாசு தீர்வதற்கும், அருவினை அற்றுப் போவதற்கும், இந்த உலகத்திலே செல்வ வாழ்க்கை சித்திப்பதற்கும் சாஸ்திரங்கள் சடங்குகளை விதிக்கின்றனவே !'

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

நாஸ்திகர் வாதிக்கலாம்: 'ஆஷாட பூதிகளே, உங்கள் மனமாசு எந்தச் சடங்கினாலும் தீர்ந்தபாடில்லையே. தீவினை செய்து தீவினையைப் பெருக்குகிறீர்களே. 'கழுகுக்குப் பிணத்திலே கண்' என்பதுபோல் உங்களுக்கும் கண் பணத்தில் தானே. எங்களைப்போல் துணிந்து "பொருளே பரம் பொருள்" என்னும் வழிக்கு வந்துவிடுங்கள்'.

இந்த இருதரத்தாரையும் நோக்கிப் பொய்கையார்—பொய் இல்லாத பொய்கையார்—அருளிச் செய்கிறார்: 'இறைவனுகிய அந்தச் செல்வத்தை முதல்முதல் அடையுங்கள். அப்போது,

மனமாசு தீரும்; அருவினையும் சாரா;
தனமாய தானே கைகூடும்!

## 7. உண்மை சமரசம்

சமரசத்திலே, இன்று சைவ வைஷ்ணவ சமரசமும் போதாது; ஆஸ்திக நாஸ்திக சமரசமும் இன்றைய தேவை தான். ஆனால் அது எப்படி முடியும்என்று கேட்கிறீர்களா?—நன்றாய்க் கேளுங்கள்.

ஆஸ்திகன் (இந்துவானாலும் கிறிஸ்தவனானாலும் மகமதியனானாலும்) சொல்லுகிறான்: 'ஒரு நேர்மையுள்ள மனிதன் கடவுளின் மிகச் சிறந்த படைப்பு' என்பதாக. 'கடவுள் தன் சாயலில், தன் பிரதிபிம்பமாக மனிதனைப் படைக்கிறார்' என்று கிறிஸ்தவர் கூறுவர்.

நாஸ்திகரோ, 'மனிதனே கடவுளைத் தன் சாயலில் படைத்துக் கொள்கிறான்' என்றும், 'யோக்கியமான கடவுள் மனிதனின் மிகச் சிறந்த படைப்பு!' என்றும் கூறுவர்.

பொய்கையார் இந்த இரண்டு கட்சிகளையும் சமரசப் படுத்துகிறார், 'தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே!' என்னும் அருமைத் திருவாக்கிலே. அன்பர்உகந்த உருவமாக அவன் பரிணமிக்கிறானும்—என்ன உண்மை!

## 8. சிந்தனைக் காடும் செயல்-திறனும்

'திக்குத்தெரியாத சிந்தனைக் காட்டிலே சுழன்றுசுழன்று திரிவதால் ஆம் பயன் அங்கு என்?' என்று ஆழ்வாரின் சமரசம் கண்டு திருப்தியடையாத நாத்திகப் பெரியார் கேட்கவும் கூடுமல்லவா? கைங்கரியமேவழிஎன்கிறார் பொய்கையார்.

கைங்கரியமென்றால் ஆரவாரஞ் செய்து விளம்பரப் படுத்திக் கொண்டு பணி செய்வதா? இரு கை தாழ ஒரு கை உயர்த்திக் கொடுப்பதா? ஆதிசேஷனைப்போல் தொண்டாற்றுங்கள் என்பர் பொய்கையார்.

சென்றால் குடையாம்; இருந்தால்சிங் காசனமாம்;
நின்றால் மரவடியாம்; நீள்கடலுள்—என்றும்
புணையாம்; மணிவிளக்காம்; பூம்பட்டாம்; புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு.

குடையாகிப் பணி செய்வதுடன் காலுக்குச் செருப்பாய்க் கிடக்கும் பணிசெய்வதே பணி. பணிவு இல்லை யென்றால் பணியும் இல்லை.

### 9. எதற்கும் சங்கம் வேண்டும்.

கைங்கரிய நெறியில் செல்வதற்குத் துணைவேண்டும்; நற்றுணைவேண்டும். நல்லார் இணக்கம் என்ற ஸத்ஸங்கம் இன்றியமையாதது. 'நள்ளேன் கீழாரோடு; உயவேன் உயர்ந்தவரோடு அல்லால்' என்பர் பொய்கையார்.

### 10. உயர்ந்தவர் யார்?

ஆறு கடலை நோக்குவதுபோல், செந்தாமரை செங் கதிர்ச் செல்வனை நோக்குவதுபோல், உயிர் மரணத்தை நோக்குவதுபோல், உணர்வு 'ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும்' என்பர் பொய்கையார். இத்தகைய உணர்வு பெற்றவரே உயர்ந்தவர்.

### 11. அந்த வழி காண வழி

'நின் அடியை வந்திப்பார் காண்பர் வழி' என்பது பொய்கையார் வாக்கு. இந்த வழியிலே மரணத்திற்கும் அஞ்சவேண்டாம்; மூப்பிற்கும் அஞ்சவேண்டாம் 'மூப்பு உன்னைச் சிந்திப்பார்க்கு இல்லை, திருமாலே!' எல்லாவற்றுக்கும் அடிப்படை:

உளன் கண்டாய் நன்னெஞ்சே! உத்தமன்; என்றும்
உளன் கண்டாய் உள்ளுவார்—உள்ளத்(து)உளன் கண்டாய்
வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான் என்று ஓர்

என்னும் அசையாத நம்பிக்கைதான்.

* * *

எல்லாம் பழைய மலர்கள் எனினும் புதுமலர்களே! பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையான மலர்களல்லவா நமது ஞானப்பொய்கையில் பூத்திருக்கின்றன.

---

பாலர் மோகினி — பத்மினி ஸ்ரீநிவாஸன்

## வீர சிப்பாய்

உலகத்தில் நாம் பெரும்பாலும் பார்க்கிறோம். ஒருவருக்கு நல்ல உதவியான காரியங்கள் செய்யாவிட்டாலும், ஒருவருக்கொருவர் கலகம்செய்து சண்டை மூட்டி வேடிக்கை பார்ப்பதில் அலாதி ப்ரியம். இந்தக் கேளிக்கையில் பெரியவர்களுக்கே இன்பம் என்றால் குழந்தைகளுக்குக் கேட்கவேண்டுமா?

பரதனும் சோமுவும் ஒரே வகுப்பில் ஒன்றாய்ப் படிக்கும் மாணவர்கள்தான். பரதன் தன் வகுப்பில் எல்லோரிடமும் மிகவும் அன்பாய் இருப்பான். அவன் முகத்தின் அழகு எல்லோரையும் வசீகரித்துவிடும். படிப்பில் அவன் முதல் ராங்கில் இருப்பான்; சோமு கடைசி எண்ணில் வகுப்பை முடித்துவிடுவான். சோமுவை எப்படியாவது நன்றாய்ப் படிக்கவைக்கவேண்டும் என்று பரதன் அவனிடம் தனி அன்பு காட்டி, தெரியாதவைகளை நன்றாய்ச்

சொல்லியும் கொடுப்பான். ஆனால் சோமுவின் மூளை அவைகளை க்ரஹித்துக்கொள்ளாது. அவன் மூளை எப்பொழுதும் யாரை யாரிடம் கலகம் செய்யலாம், யார் யாருக்குச் சண்டை மூட்டி விடலாம் என்றுதான் யோசனை செய்யும். எப்பொழுதும் வகுப்பில் யாரைப்பற்றியாவது உபாத்யாயரிடம் புகார் சொல்லாது ஒரு நாள்கூடக் கழிக்கமாட்டான்; ஆனால் துளி உண்மை இல்லாது முழு பொய் மூட்டை அளக்கமாட்டான், ஆதலால் உபாத்யாயரும் அவன் புகார்களுக்கு ஒரு வேளை இல்லாவிட்டாலும் ஒரு வேளை காது கொடுத்து விசாரிப்பார் அதனாலேயே சோமு தான் சொல்வதைச் சரி என்று உபாத்யாயர் எடுத்துக்கொள்கிறார் என்று கர்வத்தோடு இருந்தான்.

பரத்:—சோமு, வாயேண்டா! இன்று கணக்கு க்ளாஸ்பரீக்ஷை யாச்சே! உனக்குத் தெரியாததைச் சொல்லித் தருகிறேன்— என்று சகஜமாய் அழைத்தான்.

சோமு:—(கோபத்தோடு) போதும்! நீ ப்ரமாத கெட்டிக்காரன் என்றால் நீயே முதல் மார்க்கு வாங்கிக்கொள். என்னைப் பற்றிக் கவலைவேண்டாம்—என்று சீறி விழுந்தான்.

ஒன்றும் புரியாது பரத், "அட ராமா! நாம் நல்லது செய்யப் போனால் அதற்குப்பரிசு, வசவா?" என்று வருத்தப்பட்டுக்கொண்டு வகுப்பை அடைந்தான். சோமுவின் ஆத்திரம் அவனுக்கு என்ன தெரியும்!

பள்ளியில் பிள்ளைகளுக்குத் தோட்ட வேலை கற்பிப்பதற்காக தோட்டத்தில் கொஞ்சம் கொஞ்சம் பூமியை பாத்திகள் போட்டு பங்கு போட்டுக்கொடுத்திருந்தார்கள். அதில் பிள்ளைகள் அவரவர்களுக்கு இஷ்டமான விதைகளை விதைத்துப் பயரிடவேண்டும். அதில் யார் யார் நன்றாய்ப் பாடுபட்டுப் பயிர் செய்கிறார்களோ அவர்களுக்குப் பரிசு கொடுப்பார்கள்; சோமுவின சீறலுக்கு முந்திய நாள் உபாத்யாயர்கள் குழந்தைகளின் தோட்ட வேலையைப் பார்வையிட்டு பரதனுக்கு அவர்கள் வகுப்பில் முதல் பரிசு என்று தீர்மானித்தார்கள். அதை ரகசியமாய் அறிந்த சோமுவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டது. ஏதாவது சூழ்ச்சி செய்து பரதனுக்கு டீசரிடம் வசவு வாங்கித் தரவேண்டும் என்று முடிவு செய்துகொண்டான். அன்று பள்ளிவிட்டு எல்லோரும் வீட்டுக்குச் சென்றார்கள்; சோமு மாத்திரம் பள்ளியிலேயே சுற்றிக்கொண்டு இருந்தான்; அவன் யோசனை...தோட்டத்தில் காய்த்து இருக்கும் காய் கறிகளைப் பறித்துத் தான் எடுத்துச் சென்று பழியை பரத்மீது எப்படியாவது சுமத்தி அவனுக்குப் பரிசுவராத படி தடுத்துவிடவேண்டும்... அவ்வளவுதான். ஏதோ ஒரு வசனம் சொல்வார்கள், "எனக்கு இரண்டு கண் போனாலும் பரவாயில்லை; பக்கத்து வீட்டுக்காரனுக்கு ஒரு கண் போனால் போதும்" என்று பகவானை வேண்டினானாம் ஒரு மூடன். அதைப்போல் சோமு தனக்குப் பரிசு இல்லாவிட்டாலும் பரத்துக்கு வராது இருந்தால் போதும் என்று ஆசைப்பட்டான். சோமு பரபர என்று காய் கறிகளைப் பறித்து எடுத்துக்கொண்டான். வீட்டுக்கு எடுத்துச் சென்றால் அம்மா ஏதாவது கேட்டுத் திட்டுவாளோ என்று பயம் தோன்றியது. ஓசைப்படாது காய்கறிகளைத் தோட்டத்தின் குப்பையில் மறைத்து வைத்துவிட்டு வீடுவந்தான். எந்தமாதிரி

சூழ்ச்சிசெய்து பரத்தை வாத்யாரிடம் சிக்கவைக்கலாம் என்று இரவு பூராவும் யோசனையில் ஆழ்ந்தான்.

சோமு காலை எழுந்து காப்பி குடித்துவிட்டு பள்ளிக்கூடத்தின் பக்கம் சென்றான். அப்பொழுதுதான் பரத் காய்கறிகள் வாங்கிக்கொண்டு பள்ளிப் பக்கமாக வந்துகொண்டு இருந்தான். சோமு ஓடிப்போய், "காய்கறியாடா, பையில்?" என்று கேட்டான். பரத் 'ஆமாம்' என்று தலையை ஆட்டிக்கொண்டே போய்விட்டான். இதையே வைத்து அவனை மடக்கிவிடலாம் என்று குஷியாய் சோமு வீட்டுக்கு ஓடினான். அவசர அவசரமாகக் குளித்துச் சாப்பிட்டுவிட்டுத் தினத்தைவிட அரைமணி முன்னாடியே பள்ளிக்கூடம் வந்தான்.

பிள்ளைகள் எல்லோருக்கும் பள்ளிக்கு வந்ததும் முதல் வேலை அவரவர்கள் போட்ட செடியில் காய் இன்னும் பெரிசாய் இருக்கிறதா? செடி வளர்ந்து இருக்கிறதா?...என்று பார்த்துவிட்டுத்தான் வகுப்புக்குள் போவார்கள். அதுபோல் அன்றும் எல்லாப் பிள்ளைகளும் தன் பாத்திகளை ஆவலாய் வந்து பார்த்தார்கள். ஆனால் ஒருவர் செடியிலாவது காய்த்து இருந்த காய்கறிகள் காணாமல் செடி மாத்திரம் மொட்டையாய் நிற்பதைப் பார்த்துத் திகைத்தார்கள். எல்லோரும் ஒன்றும் புரியாது தலைமை உபாத்தியாயரிடம் புகார் செய்தார்கள். பிறகு விசாரிப்பதாகச்சொல்லி அவரவர்கள் வகுப்பில் போய் உட்காரும்படி உத்தரவு இட்டார், பாடுபட்டுப் பயிரிட்டும் தங்களுக்குப் பலன் கிட்டவில்லையே என்று வருத்தத்தோடு பிள்ளைகள் எல்லோரும் வகுப்பில் வந்து உட்கார்ந்தார்கள். காய்கறி திருடு போயிருப்பது அந்த வகுப்புப் பசங்களின் பாத்தி தவிர வேறு ஒருவர் பாத்தியில் ஒருபிஞ்சுகூட போகாமல் இருப்பது உபாத்தியாயருக்கு ஆச்சர்யமாய் இருந்தது. அந்த வகுப்புப் பையன்களில் யாரோ தான் திருடி இருக்கவேண்டும் என்று அவருக்கு சந்தேகம் தோன்றியது. நேராய் வகுப்புக்கு வந்தார். பசங்களைப் பார்த்து, "இதோ, பாருங்கள்! என்னிடம் யாராவது உண்மையைச் சொல்லாவிட்டால் சும்மாவிடமாட்டேன். உங்கள் பாத்தியைத் தவிர மற்றவர்கள் செடியில் ஒரு பிஞ்சுகூட திருட்டுப்போகவில்லை. திருடன் என்று வந்தால் அவனுக்கு எது எந்த வகுப்புப் பிள்ளைகள் பாத்திகள் என்று தெரியாது. எல்லாவற்றையும்தான் திருடிச் செல்வான். ஆனால் இப்போது உங்கள் வகுப்புப் பாத்திகளில் மாத்திரம்தான் குறிப்பாய் போய் இருப்பதால் உங்களில்தான் யாரோ இந்த வேலை செய்து இருக்கிறீர்கள். உண்மை சொல்லாவிட்டால் யாரும் வீட்டுக்குப் போகவே முடியாது. இல்லை, உங்களுக்கே யார்மேலாவது சந்தேகம் இருந்தால் சொல்லிவிடுங்கள்" என்றார்.

இதைக் கேட்டதுதான் தாமதம்...சோமுவின்முகத்தில் அசடு வழிந்தது!...தன்னை வாத்யார் கண்டுகொண்டு விடுவாரோ என்று பயம் தோன்றியது. சமாளித்துக்கொண்டு, "சார்! நான் இன்று காலை உலாவிக்கொண்டே நம்ப ஸ்கூல்பக்கம் வந்தேன்! சார்! அப்போது பரத் பையில் காய்கறியுடன் நம்ஸ்கூலிலிருந்து வந்தான். அப்போதே, 'காய்கறியாடா எடுத்துப்போகிறாய்?' என்று நான் கேட்டேன். பதில் சொல்லாது தலை ஆட்டிக்கொண்டே வேகமாய்ப்போய்விட்டான், சார்! அதனால் அவன்

தான் எடுத்து இருப்பான் என்று எனக்குச் சந்தேகம் தோன்றுகிறது. சார்!'' என்ருன். இதைக்கேட்ட பரத்துக்குத் தலையே சுழன்றது. ஏன்? அவன் வகுப்புப் பிள்ளைகள் எல்லோருக்குமே ஆச்சர்யமாய் இருந்தது...'ஐயோ, பரத் நல்ல பையனுச்சே! அவனு செய்திருப்பான்' என்று ப்ரமித்தார்கள் பரத் ஓடிவந்து டீச்சர் காலில் விழுந்து, "சார்'' நாங்கள் ஏழைகள், ஆனலும், நீதி நெறிகளைத் தவறமாட்டோம், சார்! நான் அப்படிச் செய்தாலும் எங்க அம்மா சும்மா விடமாட்டாள், சார்! நான் காலையில் காய்கறி வாங்கிக்கொண்டு ஸ்கூல் வழியாய்ப் போனது உண்மைதான். ஆனல் நம்பஸ்கூல்பின்னல் இருக்கும் கடையில் வாங்கிக்கொண்டு போனேன், சார்!'' என்று பரிதாபமாய்ச் சொன்னன்.

சோமு:—பின்புகாய்கறியாடா என்று கேட்டதற்கு பதில்சொல்லாது தலை ஆட்டிக்கொண்டு ஏன் திருடன்போல் ஓடினய்? கடையில் வாங்கி இருந்தால் நின்று பதில் சொல்ல பயம் என்னவாம், உனக்கு? திருடி இருப்பதால்தான் ஓடி இருக்கிருய். அதிலிருந்தே தெரிய வில்லையா?

பரத்:—நான் ஒன்றும் திருடன் இல்லை. நேற்று நான் உனக்குக் கணக்குச் சொல்லித்தரலாம் என்று நல்ல எண்ணத்தோடு கூப்பிட்டதற்கு, நீ சீறிவிழுந்தாயே! அந்தக் கோபத்தால் தான் நான் பதில் சொல்லாது போனேன். நீ எதை வேண்டுமானலும் சொல். பகவான் உண்மை இருக்கும் பக்கம் துணைபுரிவார்—என்று அழுதுகொண்டே சொன்னன்.

உபாதயாயருக்குத் தர்ம சங்கடமாய்விட்டது. இதுவரையில் பரத்மீது ஒரு குற்றம்கூட அவர் கேட்டது இல்லை. இவ்வளவு நாள் உண்மையாய் இருந்த பையன் இப்படிச் செய்வான? என்று தோன்றியது. ஆனல் காலை காய்கறியோடு பள்ளிவாசலில் அவன் பார்த்ததாய்ச் சொல்கிருன்; இவனும் ஒத்துக்கொள்கிருன். எது உண்மை என்று புரியவில்லை. "சரி! நான் பிறகு விசாரிக்கிறேன்'' என்று சொல்லிச் சென்றுவிட்டார்.

நேராய்த் தன் சிநேகிதன் வீட்டை அடைந்தார் இன்ஸ்பெக்டர் சிவன் வாத்யாரைத் தடபுடலாய் விசாரித்து உட்கார வைத்தார்.

உபாத்யாயர்:—உன்னிடம் ஒரு முக்யமான காரியமாய் வந்து இருக்கிறேன். எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு சின்ன திருடு! இதற்கு போலீஸ் தகவல் கொடுத்து தடபுடல் செய்ய இஷ்டமில்லை. நீ நம்ப சிநேகிதனுய் இருக்கிருயே; அதிலும் நாயைக் கொண்டு துப்பு கண்டுபிடிக்க வைப்பதில் நிபுணனுய் இருக்கிருயே!...என்றுதான் வந்தேன். அந்த நாயைக் கொஞ்சம் அழைத்து வந்து துப்பு கண்டுபிடிக்க வையேன், பார்க்கலாம்'' என்று பள்ளியில் நடந்த விவரம் பூராவும் எடுத்துச் சொன்னர்.

சிவன்:—சரி! நீங்கள் போங்கள். நான் உலாவ வருவதுபோல் நாயை அழைத்து வருகிறேன். உண்மை தானய் வெளிவந்து விடுகிறது.

உபாத்யாயர் நேராய்ப் பள்ளிக்கூடம் வந்தார். பரத்திடம் அவருக்கு உண்மையில் அதிகம் அன்பு இருந்ததால்தான் ப்ரயாசைப்பட்டு இதன் உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று முனைந்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் நாயுடன் சிவன் வந்தார். உபாத்யாயர் திருடுபோன பாத்தியைக் காண்பித்தார். சிவன் நாய் பாஷையில் கண்டுபிடிக்கும்படிச் சொன்னார். உத்தரவு கிடைத்ததுதான் தாமதம்...நாய் கரகர என்று பாத்தியில் இறங்கி மோப்பம் பிடித்துக்கொண்டே மெள்ளமெள்ள இவர்களை இழுத்துக்கொண்டு குப்பை மேட்டுப்பக்கம் நோக்கிச் சென்றது. குப்பை மேட்டு அருகில் சென்றதுதான் தாமதம்...ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து குப்பையைக் கிளறிக் கிளறி காய்கறியிருக்கும் இடத்தில் உட்கார்ந்துவிட்டது. சிவன அருகில் போய்ப் பார்த்தார், காய்கறிகள் அங்கு இருப்பதைக் கணடு உபாத்யாயருக்குக் காண்பித்தார். உடனே நாய் வேகமாய் பள்ளிக்கூடம் உள்ளே ஓடிப் போய் ஒவ்வொரு வகுப்பாய் மோப்பம் பிடித்துக்கொண்டே வந்தது. கடைசியில் பரத்தின் வகுப்பை நாய் அடைந்தது.வகுப்பின் உள்ளே நுழைந்ததுதான் தாமதம்—ஓரே பாய்ச்சலாயப் பாய்ந்து சோமுவின கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டது. நாய் தனமேல் பாய்ந்ததுதான தாமதம்—சோமு அலறிக்கொண்டு ஒன்றும்புரியாது "கூ"—என்று ஒரு கூச்சல் போட்டுவிட்டான். மற்ற குழந்தைகளும பயந்து அழததுடங்கிவிட்டார்கள். சிவன், சோமு அருகில் ஓடிவந்து, நாயைக் கைவிடும்படிச்சொல்லி, "இதோ பார், தம்பி! தோட்டத்தில் இருக்கும் காய்கறிகளை நீ தான் எடுத்துக் குப்பைமேட்டில் ஒளிதது வைத்து இருக்கிறாய் என்று நாய் சொல்கிறது. உண்மையைச் சொல்லிவிட்டால் அது உன்னை ஒன்றும செயயாது. பொய்சொன்னால் உன்னைவிடவே விடாது. நிஜத்தைச் சொலலிவிடு, தம்பி!" என்றார்.

சோமு பயந்த வேகத்தில் வாயைத் திறககக்கூட முடியவில்லை. உண்மை வெளிவந்துவிட்டதே என்று ஒருபுறம், உணமை சொல்லாவிட்டால் நாய் எனன செய்துவிடுமோ எனறு அலறல்? எல்லாம் சேர்ந்து அழத்தான்தெரிந்தது. உபாத்யாயர் சோமுவை சமாதானம் செய்து, "இதோ, பார் சோமு! நீ போட்ட நாடகம் பொய் எனறு நாய் நிரூபித்துவிட்டது. இனி தாமதம செய்து ப்ரயோஜனம இல்லை. பாவம பரத்தை வீணாய்ப் பழிக்கு ஆளாக்கினாய். நாய் உனனைக் காண்பித்துக்கொடுததுவிட்டது. ஊம்!... சொல்லு! எதனால் இந்தத் திருட்டுக் காரியம் செய்து பரத்தின் மேல் பழி சுமததினாய்?" எனறு அதட்டினா.

சோமு மெதுவாய் நடுங்கிக்கொண்டே, "சார்! இந்த வேலை நான் செயதது உண்மைதான், சார்! நாயைப் பார்ததால் எனக்குப் பயமாய் இருக்கிறது, அதை வெளியே போகச்சொல்லுங்கள், நான் உண்மையைச் சொல்லிவிடுகிறேன் எனறான. சிவன நாயை வெளியே அனுப்பினார். சோமு அசடுவழிந்துகொண்டு, "சார்! நான் பரத்மேல பொறாமையால்தான, சார்! இந்தத் திருட்டுக் காரியம் செய்தேன், அவன் இன்று சரியான சமயத்தில் காய்கறியுடன வந்தால் சுலபமாய் பழிசுமத்திப் பரிசுவராது செய்துவிடவேண்டும் என்று இப்படிச்செய்தேன. நான் நேற்று நீங்கள் தோட்டத்தைப் பார்வையிட்டு முதல் பரிசு பரத்துக்குஎன்று தீர்மானித்ததை நான மறைவிலிருந்து கேட்டுக்கொண்டு இருந்து பொறாமையால் ஸ்கூல்விட்டதும காயகறிகளைப் பறித்து ஒளித்து

[தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்]

# மேனாட்டுத் தத்துவம்

## 7. கிரேக்க சமயத்தின் வளர்ச்சிப் படிகள்.

ரா. ஸ்ரீ. தேசிகன் M. A.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

ஐடா என்ற குன்றின் மீது நிகழ்ந்த ஒரு முக்கிய சம்பவம் இங்கே நோக்கத் தகுந்தது. 'தங்க ஆப்பிள்' எவர்க்குரியது? என்ற ஒரு சர்ச்சை எழுந்தது. டிராய் நகரத்து மன்னனின் மகனை பாரிஸ் நியாயம் வழங்க முன் வந்தான். ஹீரா வேண்டிய செல்வத்தை நல்குவதாக வாக்களித்தாள். அத்தினா அறிவை அளிப்பதாகக் கூறினாள். அப்ஸரைடைட்டி ஓர் அழகிய மாதைத் தருவதாக உறுதி மொழிந்தாள். இறுதியில் பாரிஸ் அப்பிரடைட்டியின் சார்பாகத் தீர்ப்புச் செய்தான். ஹேலன் என்ற பெண்ணைப் பெற்றான். அப் பெண்ணால் டிராய் நகரத்திற்கு வந்த இன்னல்களுக்குக் கரையில்லை. முடிவில் டிராய் நகரம் தீய்க் கிரையாகி ஒரு பிடி சாம்பலாய்ப்போய்விட்டது. அத்தினாவும், ஹீராவும் கிரேக்கர் கட்சியைச் சேர்ந்தார்கள்.

இக் கதையில் ஒரு பெரும் உண்மை கரந்து நிற்பதைப் பார்க்கின்றோம்: செல்வம உயர்ந்ததா? பழுத்த ஞானம் உயர்ந்ததா; அல்லது அழகு உயர்ந்ததா?...என்ற ஒரு பெரும் சர்ச்சையைத் தீர்ப்பதற்காகவே ஹோமர் இந்தச் சந்தர்ப்பத்தை வகுத்தாரோ? ...என்று சொல்லும்படி இக்கதை அமைந்திருக்கிறது. அல்லது காதல் நிறைந்த தென்னாட்டிற்கும், அறிவும் செல்வமும் நிறைந்த வட நாட்டிற்கும் நிகழக்கூடிய போராட்டத்தை ஹோமர் சித்திரித்தாரா?—ஒன்றும் இயம்புவதற்கில்லை.

ஆனால் இவ் விஷயத்தை நாம் மறுக்கமுடியாது. ஹோமர் படைத்த வடநாட்டு ஒலிம்பிக் தெய்வங்கள தென்னாட்டு மூட நம்பிக்கைகளை அடித்துத் துரத்திவிட்டன என்று சொல்லுவதற்கிடமுண்டு.

ஹோமர் எழுப்பிய தெய்வங்கள் பிரபுக்கள் வணங்கக்கூடிய தெய்வங்களாகக் காட்சி அளிக்கின்றன. ஐயோனியா நாட்டுப் பண்பாட்டை ஹோமர் பரப்பினார் என்றுஞ் சொல்லலாம். இந்த மனப் பண்பாட்டில் மூன்று அம்சங்கள் தோன்றுகின்றன. பண்டைய வழக்கங்களுக்கு இது குழி தோண்டிவிட்டது, குழப்பமாய்க் கிடந்த நிலையில் ஓர் ஒழுங்கை வகுத்துத் தந்தது. சமுதாயத்தின் புதிய தேவைகளுக்கு இது ஒரு பாதையை அமைத்துக் கொடுத்தது என்று கில்பர்ட் மர்ரே கூறுகின்றார்.

புதிய புதிய பாதைகள் தோன்றினாலுங்கூடப் பழைய வழக்கங்கள் மறைந்தபாடில்லை. மேலும் ஹோமர் கண்ட தெய்வங்களைப்பற்றியும், அந்நாட்டுக் கவிகளில் கோயில்கொண்ட மதத்தின் இயல்பைப்பற்றியும் முன்பே ஆராய்ச்சி செய்திருக்கிறோம். பல தெய்வங்கள் ஒரு தெய்வ நாயகன் கீழ் அமரத் தொடங்கின.

இஸ்சியூஸ் தேவனாதனுய்த் தோன்றிவிட்டான். விதி என்பது தெய்வங்களையும் ஆட்டிவைக்கிற சக்தி. அச்சக்தியும் இஸ்சியூஸ-ம் ஒன்ருய்க் கலந்துவிட்டனர். பிண்டர், எஸ்கிலஸ், சனபோனீஸ்—இவர்கள் ஹோமர் வகுத்த மதத்தைத் தூய்மைப்படுத்தினர். ஹெர்மீஸ், அத்தீனு, அப்பாலோ—இத் தெய்வங்களின சரித்திரங்களும் புனிதமாயின. இதுதான் கிரேக்க மதம் அடைந்த இரண்டாம் படியாகும்.

கி. மு. நான்காம் நூற்ருண்டில் தோன்றிய சமயப் பள்ளிகளின் தத்துவங்கள் ஆராய்ச்சிக்குரியவை. ஏதன்ஸ் நகரம் வீழ்ந்தது. அதன் பழம் பெருமை பறந்துவிட்டது. பிளேட்டோ குடியரசில் நம்பிக்கை இழந்தார். ஒரு லட்சிய குடியரசை உலகத்திற்களித்தார். உலகத்திலேயே அறிவில் சிறந்த சான்ருேனுகிய சாக்ரடீஸ்-க்கு விஷம் தந்தனர், அவர் நாட்டு மக்கள். சனபன் என்ற ஆசிரியர் தேசத்தைவிட்டு ஓடிவிட்டார். 'சைரஸ்ஸின் கல்வி' (Education Of Cyrus) என்ற புத்தகத்தில் அவர் ஒரு லட்சிய மன்னனைச் சித்திரித்திருக்கிருர். எது நல்லது? எதை லட்சியமாகக் கொள்ளவேண்டுமென்பதே கிரேக்கரின் முயற்சியாயிருந்தது.

போர் புரிவதற்கு முன்பு இரு கட்சியர்களையும் தங்கள் தங்கள் லட்சியம் யாதெனறு கேட்டால் 'வெற்றிதான்' என்றே கூறியிருப்பார்கள். வெற்றி அடைந்தவன் தான் வெற்றிக்காகப் பாடுபடவில்லை; வெற்றியால் விளைந்ததை ஒழுங்குபடுத்துவதற்கே என்று பிறகு சொல்லுவான். தோற்றவன் அறத்திற்காகப் பாடுபட்டு உயிரைவிடுகிறதைவிட வேறு நன்மைஉளதோ? ...என்று கூறுவான். நியாயமல்லாத காரியத்தில் இறங்கிப் பொருளீட்டுவதைவிட மரிப்பதே அறமெனறு சாற்றுவான்.

இப்படிச் சார்ச்சை செய்வது மனிதனின் இயல்புபோலும். பெரிகிலீஸ் கண்ட ஏதென்ஸ் நகர மாந்தர் முதல் சுருதியில் பேசியிருக்கலாம். சுதந்திரம், நியாயம்—இவைகளைப் பரப்பவேண்டுமென்று சொல்லியிருப்பான். வெற்றி நறவை உண்டவன்தான், இப்படித் தைரியமாய்ப் பேசலாம். ஆனல் ஏதன்ஸ் நகரத்தின மீது கெட்டகாலமாம் முகில் சூழத்தொடங்கிவிட்டது! ஆன்டிஸ்தினீஸ் (Antisthenes) என்பவர் இரண்டாம் சுருதியில் பேசத் தொடங்கினர். எல்லாம் மாய்ந்தால் என்ன?...அறத்திற்காகப் பாடுபடுவதிலேயே இன்பமில்லையா?...என்று தம் கருத்தை வெளியிட முயன்ருர். அநாதைகளுக்காகப் பள்ளியொன்றை நிறுவினர். யார் கெட்டவர்கள் என்று அழைக்கப்படுகின்ருர்களோ அவர்களோடு உறவாடினர். ஒரு கூலியாளைப்போல உடைதரித்தார். இன்னல்களைத் தாங்கக்கூடியவர்களையே தமக்குச் சிஷ்யர்களாகச் சேர்த்துக்கொண்டார். புதிதாகச் சேர்பவர்களைத் தடியால் அடித்துத் துரத்த முயலுவார். எல்லாவற்றையும் வெறுத்த இந்த ஞானியின் புகழ் மிகமிக ஓங்கியிருக்கக்கூடும்.

ஒரு இளைஞன் சைனேப்பி என்ற இடத்தில் பிறந்தவன். இவ்விளைஞன் இவரை நாடினன். தடியால் அவனை அவர் அடித்தார். அவன் அந்த இடத்தைவிட்டு அகலவில்லை. இவனுடைய தகப்பன் நாணயத்தை மாற்றினன். அதனுல் அவன்

சிறைச்சாலைக்குப் போக நேர்ந்தது. "செல்வம், புகழ, அறிவு—என்றெல்லாம் உலாவுகின்ற பிணத்தை புதிய முறையில் அழித்து விடுகிறேன் பார்" என்று தீர்மானம் செய்துகொண்டான். இச் சிறுவன் அவன் காலத்தில் பரவியிருந்த சமயத்தை வெறுத்தான். வெறும் ஆடம்பரங்கள் தேவையில்லை. மதமென்பது மனத்தின் தூய்மையே! திருவிழாக்கள், நாடகங்கள், கூத்துக்கள் இவை யாவும் இவர் நிந்தனைக்கு இலக்காயின. மனிதனின் ஆசா பாசங்கள் ஒழியவேண்டும். ஒரு நாய் வாழ்வு வாழவேண்டும்... 'நாயினும் கடையேன்' என்ற சொல் நம் ஆழ்வார்களின் இடையே எழுகின்றதன்றோ? ஒரு ஸினிக்காய்(Cynic) ஒரு சுவானமாய்த்திரிய வேண்டும். ஒரு கம்பளி, ஒரு பாத்திரம், ஒரு தடி—இவைகள் மனிதனுக்குப் போதும், என்றார்.

இவரைப் பற்றியே கதைகள் பல உள. பழைய காலத்தில் சவங்களைப் புதைக்கப்படுகிற ஒரு பெரிய மட்பாத்திரந்தான் இவர் உறைகின்ற இடம். அங்கேதான் தூங்குவார். நாயைப்போலவே மலஞ் ஜலங்களைக் கழிப்பார். நாணமென்பதே அவர் அகராதியில் இல்லை. ஒரு சட்டங்களையும் அவர் வணங்கினதில்லை. நாய் நரிகள் நரர்கள்—எல்லோரும் இவருக்குச் சகோதரர்கள் தான். பிச்சையெடுத்து உண்பார். தெருவிலேயே உபதேசஞ்செய்வார். ஆசை யிருக்கிறவரையில் அச்சமிருக்கும்; ஆசை ஒழிந்தால் அச்சமேது ?...

பகலில் விளக்கேற்றினாராம். "ஏன் ஏற்றுகிறீர்கள் ?" என்று கேட்டதற்கு, "நல்லவர்கள் இருக்கிறார்களோ என்று தேடுவதற்காகவே இப்படிச் செய்தேன்" என்று சொன்னாராம். அலெக்ச்சாண்டர் இவர்முன்பு நின்று தங்களுக்கு என்ன வேண்டுமென்று கேட்டார். அதற்கு அவர், "குளிர் காய்ந்துகொண்டிருக்கிறேன். சூரியனை மறைக்காதே"என்று பதில் அளித்தார். "நான் அலக்சாண்டராயிராமலிருந்தால், டையாஜினிஸாக இருப்பேன்" என்று வேந்தன் கூறினான் என்ற ஒரு கதை உலாவுகின்றது. "நான் டையாஜினிஸாக இல்லாமலிருந்தால், அலக்சாண்டராயிருப்பேன்" என்று உலகத்தைத் துறந்த அந்த உத்தமன் உரைத்தாராம். உலகத்தை வென்ற வேந்தனும் உலகத்தைத் துறந்த அந்தச் சான்றோனும் சமனாய் நின்றனர். 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பதை இவர் தம் வாழ்க்கையில் காண்பித்துவிட்டார்.

இறக்கும் தறுவாயில் அவரைப் புதைக்கும் சம்பந்தமான சில கேள்விகளை அவருடைய சிஷ்யர்கள் கேட்டார்களாம்! 'என்னைப் புதைப்பானேன்? என்னுடைய சவம் நாய் நரிகளுக்கும் பயன் படட்டுமே' என்றார். 'அப்படிப் புதைக்கவேண்டும் என்று நீங்கள் விழைந்தால் என் முகத்தைப் பூமிக்குக் கீழ்ப்புறமாக வைத்துப் புதையுங்கள். உலகம் கெட்டுவருகின்றது. என் கண்களால் அதைப் பார்க்க சகிக்கவில்லை'...'ஒன்றையுங் கண்டு அஞ்சாதே, ஒன்றையும் விரும்பாதே, ஒன்றையும் வைத்துக்கொள்ளாதே'...என்றும் கூறினார். ரகசியக் கொள்கைகளை வெறுத்தார். ரகசியக் கொள்கைகளை வைத்துக்கொண்டு தனித்த மனிதன் பேரின்பம் அடைவது ஒரு திருடனின் நிலையை ஒக்கும். எல்லோரும் அப்பேரின்பத்தை அடையவேண்டும் என்பதே அவருடைய

அவா! ஆசையை ஒழித்து வாளா இருந்தால் அலைகள்போலச் சதா மோதுகின்ற வாழ்க்கை இன்னல்கள் என்ன செய்யமுடியும்!?

டையாஜினிஸ் உலகத்தை வெறுத்தார்; இதற்குப் பதிலாக வேறு ஒரு சிருஷ்டியைத் தரவில்லை—பார்க்கவில்லை. பிளேட்டோவோ உலகத்தை வெறுத்தாலும்,ஒரு புதிய அமரநாட்டைச் சமைக்கப் பார்த்தார் என்று கில்பர்ட் மர்ரே மொழிகின்றார். உலகத்தைச் சாதாரணமாய் வெறுக்கமுடியுமோ?ஏதோ ஒரு லட்சியத்தைக்கண்டவன்தான் இப்படிச் செய்யமுடியும். எத்தனை பெரிய லட்சிய நாடு அவர் கண்முன் உலாவிற்றோ? யாருக்குத்தெரியும்? இவருடைய உபதேசத்தால் வாழ்க்கையின் இன்னல்களைக் கண்டு நகுவதற்கு முடிந்தது.

ஸீனோ (Zeno) என்ற பெரியவர் தோன்றினார். இவர் கொள்கை கீதையில் கூறப்பட்ட 'ஸ்திதப்ரக்ஞனின்' நிலையை நினைவூட்டுகின்றது. "உதாசீனனாயிருந்து விடு. உலக இயலை ஏற்றுக்கொள். எந்தத் தொழிலாயிருந்தாலுஞ் சரி, உன்னுடைய காரியத்தைச் செய்வாயாக. பலனைப் பற்றிக் கவலைப்படாதே. தோல்வியோ, வெற்றியோ அதைப் பற்றிய நினைவு உனக்கு வேண்டாம். ஏதோ ஓர் ஆண்டவனின் சட்டம் ஆளைச் செலுத்துகின்றது. அதில் யாதொரு பிழையுமில்லை"... இந்தக் கொள்கையை அவர் பரப்பினார். இஸ்டாயிக் தத்துவத்தை (Stoicism) இவர் உலகத்திற்கு அருளினார்....நம்முடைய அழிவும் பகவானுடைய கட்டளையாயின் அது நடக்கட்டும்...இத்தகைய கொள்கைகள் கிரேக்க மக்களின் இருள் சூழ்ந்த நிலையில் ஒரு வெளிச்சத்தையும், ஆறுதலையும் நல்கின.

எபிக்கூரஸ் (Epicurus) என்றவர் தோன்றினார். டிமாகிரிட்டஸ் (Democritus) என்ற அணுவாதியின் கொள்கையை இவர் தெரிந்துகொண்டார். உடல்நலம் போதாதுபோனாலும், அவருக்கு அமானுஷ்யமான தைரியமிருந்தது.

மக்கள் பயத்தினால் தங்களை வருத்திக்கொள்கின்றனர். மனிதனிடமிருந்தும் தெய்வத்தினின்றும் அவன் பயப்பட வேண்டியதில்லை. ஆண்டவன் கலியாண குணமுள்ளவன், அவன்பிறர்க்குத் துன்பத்தைக் கொடான். கெடுதலையும் உலகத்தில் நடமாடவிடான். நியாயமாய் நடந்தால் கெடுதலைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை. மரணம் ஒரு தூக்கந்தான். 'உறங்குதல்போலும் சாக்காடு" என்றார் திருவள்ளுவரும். துன்பம்வருமாயின் அதைப் பொறுத்துக்கொள்ள முடியும். மனிதன் நிலத்தை உழட்டும் ஒருவரையொருவர் நேசிக்கட்டும். இயற்கையாய் அமைந்துள்ள இன்பத்தை அவன் காணமுடியும். இன்பத்திற்குக் காரணம் அன்பே என்றார்.

இஸ்டாயிக்கும், ஸினிக்கும் உலகத்தைத் துறந்தனர். உலகத்தின் இன்னல்களுக்கிடையே மனிதன் ஒழுங்காயிருக்கமுடியும் என்று அவர்கள் சாற்றினார்கள். ஆனால் இவரோ இத்தனை துன்பங்களுக்கிடையே மனிதன் இன்பமாயிருக்கமுடியும் என்று மொழிந்தார். இன்பத்தை ஒரு முடிவாக வைத்துக்கொண்டு வாழ்க்கையை நடத்தவேண்டும் என்று அவர் சொல்லவில்லை. ஆசாபாசங்களை ஒழித்து, அச்சந்தவிர்ந்து அன்பு காட்டினால்

தானே இன்பம் பிறக்கும் என்றே அவர் கூறினர். நமது சார்வாக மதத்தினர்போல உண்டுகளித்து உறங்குகின்றதத்துவமில்லை.

எப்பிகூரியர்கள் (Epicurians) எளிய வாழ்க்கை நடத்தினர். மாமிசமும் சாப்பிடவில்லை; சாராயமும் பருகவில்லை. உலகம் அவர்கள்மீது மிகுந்த பழிகளைச் சுமத்திவிட்டது. சுய நலம் பேணும் மதமென்று கருதினர். அது உண்மையன்று. அன்பைத் தமக்குக் களைகண்ணுயப் போற்றுகிறவர்களிடத்தில் எப்படிச் சுய நலம் பிறக்கும்? இவருடைய மதம் அநேகம்பேர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்டது.

அரிஸ்டாடிலும் (Aristotle) மத உணர்ச்சி அற்றவர் அல்லர். அவரிடத்தில் பௌதிகப் பண்பும், மத உணர்ச்சியும் கலந்து நின்றன. புராணக் குப்பைகளை உதறித்தள்ளிவிட்டார்.

மேலே கூறப்பட்ட சமயக் கழகங்கள்தான் மூன்றவதுபடியாகும்.

ஏதன்ஸ் குடிஅரசு ஓங்கி நின்றகாலத்தில் கிரேக்கர்கள் புற உலகத்தில் காலத்தைக் கழித்தனர். வலிவு குன்றியபொழுது அவர்களுடைய சர்ச்சைகளெல்லாம் அகவுயிர்த் தத்துவத்தின்பால் சென்றன. எப்படித் தம்தம் அகவுயிரைக் காப்பாற்ற முடியும் என்ற துறையில் இறங்கினர். கிறிஸ்துவ மதத்தில் மிளிர்கின்ற கொள்கைகளும், அகவுயிர்த் துறையில் பாடுபடுகின்ற சான்றோர்களின் தத்துவங்களும் அவர்கள் நூல்களில் காணப்படுகின்றன. எல்லாம் விதியின் விளையாடல்கள். எல்லாம் ஒழுங்காய்த்தான் நடந்துகொண்டிருக்கின்றன. ஆதிகாரணமான பகவானுடைய படைப்பில் எது கெடுதலாயிருக்கமுடியும்? நல்லதிலிருந்து நல்லதுதானே பிறக்கும். ஊர்பேர் தெரியாத ஒருவருடைய உபதேசத்தை நோக்கினல், நமக்கே ஓர் ஆச்சரியம் எழும்.

"நான் ஒருவனுக்கும் விரோதியாக ஆகவேண்டாம். எது அழியாமல் நிலைபெற்றிருக்கிறதோ, அதற்கு நான் நண்பனுக வேண்டும். சான்றோர்களின் அடிச்சுவடுகளை நான் பின்பற்றுவேனுக. பிறர் துயர்களைத் துடைக்க முன்வருவேன். என் சீற்றத்தை அடக்குவேன்" இந்தச் சுருதியில் உபதேசம் செல்லுகின்றது. 'எந்த நிலையிலும் நன்மையை நாடவேண்டும்' என்ற உபதேசம் எத்தனை பெரிய உபதேசம் பாருங்கள்! கிறிஸ்திவப் பாதிரிகள் கிரேக்க நாகரிகத்தைப் பழிக்கத் தொடங்கினர். கிறிஸ்துவ மதத்தில் க்ரேக்கக் கருத்துக்கள் நுழைந்த விதத்தை அவர்கள் அறியார்கள் போலும்.

மேலும், சிலர் கிரேக்க புராணங்களைத் தத்துவ ரீதியில் ஆராயத் தொடங்கிவிட்டனர். ஹெஸ்டியா என்பது பூமி, பாசிடன் என்பது நீர், ஹீரா என்பது காற்று, ஹெபிஸ்டாஸ் என்பது நெருப்பு, அப்பாலோ என்பது சூரியன், ஆர்டிமிஸ் என்பது சந்திரன்... இப்படித்தான் ஆராய்ச்சி செய்யவேண்டும். புராணங்களுக்குத் தத்துவப் பொருள் தருவதுதான் முறை என்று சிலர் முன்வந்துவிட்டனர். நாமும் புராணங்களுக்கு உட்பொருள் தருகின்றோமல்லவா?

# ஹைதராபாத் கடிதம்

[ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்]

*அன்புள்ள சகோதரி!*

நம் பாரதத் தாயின் தவப் புதல்வரும், நம் நாட்டு பிரதம மந்திரியுமான ஸ்ரீ ஜவஹர்லால்ஜீயின் ஹைதராபாத் விஜயத்தைப் பற்றி உனக்கு எழுத விரும்புகிறேன்.

2—1—54-ந் தேதியன்று ஹைதராபாத் நகரவாசிகளுக்கு மகாபுனித தினமாகத் திகழ்ந்தது. பீகம்பேட் விமான நிலயத்தில், நகர பிரமுகர்களும் அதிகாரிகளும் தேசத் தொண்டர்களும் கூடி நேருஜிக்கு அற்புத வரவேற்பளித்தனர். பிறகு அவ்விடத்திலேயே பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டிருந்த வசதியில் நேருஜீக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. பிறகு அங்கிருந்து நேராக, உஸ்மானியா யூனிவர்ஸிடி Campus-ல் புத்தம்புதிதாக, நவநாகரீக தினுஸில் நிர்மாணமாகி இருக்கும் (Industrial and Science Laboratories) தொழில் மற்றும் விஞ்ஞான பரிசோதனை நிலயத்தின் கட்டிடத்தின் ஆரம்ப விழாவைத் துவக்க வேண்டி நேருஜீயவர்கள் Open Car-ல் ஊர்வலமாகக் கிளம்பினார். வழி நெடுக, இருபுறமும் ஜனத்திரள் தேசத் தலைவனை ஜயகோஷத்துடன் வரவேற்றது.

கட்டிடத்தின் ஆரம்ப விழாவின்பொழுது நேருஜீயவர்கள் செய்த அர்த்த புஷ்டியுள்ள சொற்பொழிவைக் கேவலம் என்னால் விவரிக்க இயலுமா? நாடு மேன்மையுற விஞ்ஞானம் வெகு அவசியம் என்பதை நாட்டின் சாமானிய பிரஜையும் அறியும்படிச் செய்யவேண்டும் என்றார். பிரஜா புரபுத்வம் என்றால் மக்கள் ஆட்சி (Republic) ஆனது நாட்டின் மக்களின் கொள்கைப்படி நடக்கவேண்டி இருப்பதால், நாட்டின் சாமானிய பிரஜைக்கும் விஞ்ஞானத்தைப் பற்றிய அறிவுஇருந்தால்தான் அரசாங்கம் சுமுகமாக நடக்கக் கூடும். இத்தகைய பரிசோதனை ஆலயங்கள் (Laboratories) நாட்டின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் தோன்றி, நாட்டின் விஞ்ஞானிகளின் எண்ணிக்கை மட்டுமின்றி அவர்களுடைய

---

குருக்ஷேத்திரம் என்பது நம்முடைய சரீரம். பாரதப்போர் என்பது நம்முடைய அகத்தில் நிகழக்கூடிய போர். வெற்றி என்பது நம்முடைய ஆத்மாவின் வெற்றி...என்று பாரதத்தை ஆராய்கின்றனர். சீதைதான் ஆத்மா, இலங்கை என்பது சரீரம், இராவணன் காமம், அனுமன்தான் ஆசாரியன், இராமன்தான் பரமாத்தா, ஆத்மாவைத் தானே தேடி வருகின்றான்...என்று வேதாந்த முறையில் நாமும் இராமயணத்தை ஆராய்கின்றோம்.

இந்தப் படிகளாகக் கிரேக்க மதம் செல்லுகின்றது. வாழ்க்கை என்பது 'முன்பும் பின்பும் காணமுடியாதபடி சிதைந்துபோன ஒரு பண்டைச் சுவடி' என்று ஒரு கவி மொழிந்திருக்கிறார்.

பரிசோதனை (Researches) களும் வெற்றியுடன் பெருகினால்தான், நாடு மேன்மையுறும் என்று கோஷித்தார்.

விஞ்ஞானிகளுக்கு தாராள மனப்பான்மை அவசியம் வேண்டும். அவர்கள் பரந்த உள்ளத்துடன் நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்கவேண்டும் என்றும் அருளினார். விஞ்ஞானம் என்பதை சத்யசோதனையாக்கோம் என்றார். ஒரு நாட்டை ஆட்சிபுரிபவர்கள் எல்வளவோ சாமர்த்யசாலிகளாக இருப்பினும், அதனுடன்கூட. அந்நாட்டின் விஞ்ஞானமும் பலவிதத்திலும் முன்னேற்றமடைந்து வந்தால்தான், அந்நாடு பலமுறைகளிலும சிறப்புற விளங்கும் என்றார். ஆட்சிபுரியும் அதிகாரவர்க்கத்தைவிட விஞ்ஞானிகளுக்கும், இன்ஜினீயர்களுக்கும்தான் மகத்துவமுண்டு என்றார். அந்த விசால மண்டபத்தில், நிசப்த சூழ்நிலையில், அவருடைய கம்பீரமான சொற்பொழிவானது அங்கே நிறைந்திருந்த ஜனத்திரளின் இதயத்தில் புகுந்து வேலை துவக்கி, ஒருவித புனிதத் தன்மையை உண்டுபண்ணிற்று. 'ஏற்கனவே நம் நாட்டில் உள்ள பல பரிசோதனை ஆலயங்களில் மெச்சத்தக்க நற்காரியங்கள் நடந்துவருவது மகிழ்ச்சிக்குரியது என்றார்.

அன்று சாயந்திரம், உஸ்மானியா யூனிவர்ஸிடி Campus-ல் குளிர்ந்த வேளையில் பிரம்மாண்ட சபையில் இந்தியாவின் முக்கிய அமைச்சர் பண்டித ஜவஹர்லால்நேருஜீயவர்கள் இண்டியன் ஸயன்ஸ் காங்கிரஸ்ஸின் 41-ம் மகாநாட்டை வைபவத்துடன் ஆரம்பித்து வைத்தார். சுற்று வட்டாரம் முழுவதும் இயற்கையன்னையின் எழில் பொங்கும் அழகிய நந்தவனம்; அங்கங்கே மனிதனின் சாமர்த்தியத்தாலும் பலத்தாலும் நிறுவப்பட்ட உஸ்மானியா யூனிவர்ஸிடி கட்டிடங்கள் எட்டிப் பார்த்தன; அந்த விசால மைதானத்தில் வரிசை வரிசையாகப் போட்டிருந்த நாற்காலிகளில் மாணவமாணவிகளும் யூனிவர்ஸிடி ப்ரோபஸர்களும் நகர பிரமுகர்களும் அதிகாரிகளும் விருந்தினராக (Guests) அமர்ந்திருந்தனர். முன்னால் விசாலமானதொரு மேடை. அதை மணிமண்டபம் ஒன்று அலங்கரித்திருந்தது. பலவித வண்ண மின்சார தீபங்களாலும் தோரணங்களாலும் மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேடையின் முதல் வரிசை நாற்காலிகளில், நடுவில் மகாநாட்டின் ஆரம்ப விழாத்தலைவர் ஸ்ரீநேருஜீயும் அவருடைய இடப்பக்கம் ஹைதராபாத் சம்ஸ்தானத்தின் நைஜாமும் வலதுபுறம் ஸையன்ஸ் காங்கிரஸ்ஸின் தலைவர் ஸ்ரீமான் டாக்டர் சுந்தரலால் ஹோராவும் பிறகு ஹைதராபாத் இளவரசரான பிரின்ஸ் ஆப் பீரார், அவருடைய பத்தினி, ஹைதராபாத் சம்ஸ்தான முக்கிய மந்திரி டாக்டர் B. ராமகிருஷ்ணராவ், உலகின் பெயர்பெற்ற விஞ்ஞானிகள், ஹைதராபாத்தின் மற்ற மந்திரிகள்......எல்லோரும் அமர்ந்திருந்தனர்.

நம் இந்தியாவின் அரும்பெரும் தலைவரைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த ஜனத்திரள், அவருடைய கம்பீர வாக்கின் மூலம் கிளம்பிய அமுத மொழிகளை நிசப்தமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. ஆகா! எப்பேர்ப்பட்ட அற்புத சொற்பொழிவு! ஒவ்வொரு பேச்சும் ஒவ்வொரு நல்முத்து போன்றது! நாட்டின் எதிர்கால மக்களுக்கு ரக்ஷைபோல் இருந்தது அவர் வாக்கு.

குறித்த சுபமுகூர்த்தத்தில் மகாநாடு தொடங்கிற்று. பாரத மாதாவை வணங்கும் கீதத்துடன் சபை தொடங்கவே, சம்ஸ்தானத்தின் முக்கிய மந்திரி டாக்டர் B. ராமகிருஷ்ண ராவின் வரவேற்புச் சொற்பொழிவு நிகழ்ந்தது. அதன் பிறகு நேருஜீயின் திவ்விய வாக்கு.

நம்நாட்டில் ஐந்தாறு வருடங்களாக விஞ்ஞான பரி சோதனைக் காரியம் வெகுவாக முன்னேறியிருக்கிறது. மற்றும் இந்தக் காரியத்துக்காக பலமான அஸ்திவாரம் நிறுவப்பட் டிருக்கிறது என்றார். விஞ்ஞானத்துக்கும், விஞ்ஞானிகளுக்கும் முன்னுள்ள பெரும் புதிர் எதுவென்றால், விஞ்ஞானமானது மக்களின் கலியாணத்துக்கா அல்லது அழிவிற்கா என்பது தான் என்றார்.

நாட்டில் லேபொரேடரிகளை நெடுக நிறுவிவைத்துக் கொண்டு போவதில் பயனில்லை. விஞ்ஞானிகள் சாமர்த்திய மாகவும் சீராகவும் ஆர்வத்துடனும் விஞ்ஞான பரிசோதனை செய்து நாட்டின் செழிப்புக்காக உழைக்கவேண்டும் என்றார். நாட்டின் முன்னேற்றம் வெறும் ராஜகாரணிகளினால் (Politicians) மாத்திரம் நடைபெறாது. விஞ்ஞானிகளின் ஒத்தா சையும் வேண்டும் என்றார். அம்மகானின் திவ்ய சொற் பொழிவை விமர்சனம்செய்ய நான் எம்மாத்திரம்?

அதன்பிறகு டாக்டர் சுந்தர்லால் ஹோரா பேசினார். இதுவரையில் நம்நாட்டுப் புகழ்பெற்ற விஞ்ஞானிகளினால் நடைபெற்றுள்ள அரும்பெரும் பரிசோதனைகளையும் அவர்க ளுடைய திறமையைப்பற்றியும் நினைவுமூட்டினார். தற்சமயம் நம் நாடு பலவிதங்களிலும் செழிப்புறவேண்டி ஆகவேண்டிய பரிசோதனைகளை எடுத்துச் சொல்லி சுவாரசியமாகப் பேசினார்.

அன்றிரவு ஹைதராபாத் நகரின் உஸ்மானியா யூனிவர் ஸிடியின் வைஸ் சான்ஸலர் டாக்டர் பகவந்தத்தின் பங்களா வில் ஸ்ரீ நேருஜிக்கும், மற்ற ஸையன்ஸ் காங்கிரஸ் டெலிகேட்டு களுக்கும் பெரியவிருந்து ஒன்று நடைபெற்றது. அதற்கு மறு நாள் ஆகக்கூடி நேருஜிக்கு இந்த நகரில் இடைவிடாத அலுவல்கள்.

# காளிதாசர் கனவு

## 2; அன்பின் வெற்றி

(கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பரத சாஸ்திரக் கலையை நன்குணர்ந்த நான், அதுவரையில் காணாத முறையில் ரசமயமான நாட்டியத்தை என சந்திரகலா தேவியின நடனங்களில் கண்டேன். அவளை நான் மணந்தபிறகு என் முன்பாகவும், மற்ற சுற்றத்தார் முன்பாகவும் மட்டும்தான அந்தப்புரத்தில் நடனம்செய்வாள. அரசகுமாரி அல்லவா? ஆனால் நாட்டியத்தையே தொழிலாகக்கொண்டவர்கள்கூட அவளுக்கு இணையாக ஆட முடியாது. நான கற்ற நாட்டியக் கலையின் அபூர்வமான அழகு மர்மங்களை பிரேமசுந்தரி அவளுக்குக் கற்றுக்கொடுத்தாள். அவைகளை அவள எவ்வளவு சீக்கிரமாகப் பிடித்துக் கொண்டு, அழகுபடுத்தி, பிரேமசுந்தரியே புகழ்ந்து கொண்டாடும்படி நடித்துக் காண்பித்தாள் தெரியுமா? பிரேமசுந்தரி கூறின இந்த அதிசயத்தைத்தான் நான், 'மாளவிகா அக்னிமித்ர' நாடகத்தில், மறைபொருளாகக் கூறியிருக்கின்றேன்.

யத்யத் ப்ரயோக விஷயே பாவிகமுபதிச்யதே ததாதஸ்யை |
தத்தத் விசேஷ கரணாத் ப்ரத்யுபதிசதீவ மேபாலா ||
பாத்ரவிசேஷ்ஷ ந்யஸ்தம் குணாந்தரம் வ்ராஜதி சில்பமாதாது: |
ஜலமிவ ஸமுத்ர சுக்தௌ முக்தாபலதாம் பயோதஸ்ய |

(நாட்டியப் பிரயோக காலத்தில் எந்த எந்த முறைகள் அவளுக்குக் கற்பிக்கப்பட்டனவோ அவைகளை நன்றாக மெருகு கொடுத்துச் செய்வதால் அவள் எனக்கே ஆசிரியையானாள். மேகத்தில் இருந்து விழுந்த மழைத் துளி சிப்பியில் புகுந்து முத்தாவதுபோல அறிவாளியான மாணவிக்கு அறிவிக்கப்பட்ட கலை மிக உயர்ந்த அழகுடன் விளங்கும்.)

சந்திரகலையை நான் மணந்த பிறகுதான் அவளுடைய ஒப்புயர்வற்ற நாட்டிய கலைத் தேர்ச்சியை நான அறிந்தேன. ஒவ்வொரு நடனமும் முடிந்து அவள் நிற்கும் நிலையே ஒரு தனி அழகு.

வாமம் சந்திஸ்திமிதவலயம் ந்யஸ்ய ஹஸ்தம் நிதம்பே
க்ருத்வாச்யாமாவிடப ஸத்ருசம் ஸ்ரஸ்தமுக்தம் த்விதீயம் |
பாதாங்குஷ்டாலு லிததுஸுமேகுட்டிமே பாதிதாக்ஷம்
ந்ருத்தா தஸ்யா:ஸ்தித மதிதரம் காந்தம் ருஜ்வாயதார்த்தம் ||

(கர்த்தனத்திற்குப் பிறகு மணிக்கட்டில் அசைவற்றிருக்கும் வளையல்களை அணிந்த தன்னுடைய இடது கையை இடுப்பில் வைத்து சியாமைச் செடியைப்போன்ற தன்னுடைய வலதுகையைத் தொங்கவிட்டு தனது கால் பெருவிரலால் பூமியில் விழுந்த மலரைக் கசக்கி நோக்கும் அவளுடைய நேர்மையான நீண்ட உடலின் தோற்றம் வெகு அழகாக இருக்கின்றது.)

இவ்வளவு இயற்கை யழகும், கலையழகும் சேர்ந்து ஒரு பெண் உருவத்தை பிரமன் எப்படித்தான் படைத்தானோ! இதைத்தான் நான் அநேக இடங்களில், என் அனுபவத்தை ஒட்டிக் கூறியிருக்கிறேன் என்பது இப்பொழுது உனக்கு தெரியவரும்.

மானுஷீஷு கதம் வாஸ்யாதஸ்ய நுபஸ்யஸம்பவ: |
நப்ரபாதரலம் ஜ்யோதிருதேதி வஸுதாதலாத் ||
ஸர்வோபமாத்ரவ்யஸமுச்சயேன யதாப்ரதேசம் வினிவேசிதேன |
ஸாநிர்மிதா விச்வஸ்ருஜாப்யத்நு தேகஸ்த சௌந்தர்ய
தித்ருக்ஷயேவ ||
தன்வீச்யாமா சிகரிதசனு பக்வ பிம்பாத ரோஷ்டீ
மத்யேச்யாமா சகித ஹரிணீ ப்ரேக்ஷணு நிம்ன நாபி: |
ச்ரோணீபாராதலஸ கமனுஸ்தோக நம்ரா ஸ்தனுப்யாம்
யாதத்ராஸ்தே யுவதிவிஷயே ஸ்ருஷ்டிராத்யேவதாதுः ||
சித்ரேநிவேச்ய பரிகல்பித ஸத்வயோகா
நுபோச்சயேன மனஸாவிதினு க்ருதானு |
ஸ்த்ரீ ரத்ன ஸ்ருஷ்டிரபரா ப்ரதி பாதிஸாமே
தாதுர்விபுத்வமனுசிந்த்ய வபுர்ச தஸ்யா: ||
அஸ்யா: ஸர்கவிதௌ ப்ரஜாபதிரபூத் சந்த்ரோனு காந்திப்ரத:
ச்ருங்காரைகரஸ: ஸ்வயம் நுமதனே மாஸோனு புஷ்பாகர: |
வேதாப்யாஸ ஜட: கதம் ஸ விஷய வ்யாவ்ருத்த கௌதூஹல:
நிர்மாதும் ப்ரபவேர் மனேஹரமிதம் நுபம் புராணேமுனி: ||
அவ்யாஜ ஸுந்தரீதாம் விஞ்ஞானேனலலிதேன யோஜயதா |
பரிகல்பிதோவிதாத்ரா பாண: காமஸ்ய விஷதிக்த: ||

(மனித மங்கையர்களுக்குள் இத்தகைய உருவம் உண்டாகுமா ? தகதக வென்று மினிரும் ஜோதி பூவுலகிலிருந்து உண்டாகாது.

உவமைக் கருவிகளையெல்லாம் ஒன்றுதிரட்டித் தக்க இடங்களில் உடலில் அவைகளைப் பொருத்தி ஒரே இடத்தில் எல்லா அழகையும் காண மையல்கொண்டு பிரமனால் சிரமப்பட்டு அவள் ஸ்ருஷ்டிக்கப்பட்டாள்.

அவள் மெல்லிய சரீரமுள்ளவள். யௌவனத்தின் நடுவில் இருப்பவள். அழகிய பல் வரிசையுள்ளவள். கோவைப் பழங்கள் போன்ற அதரங்கள்; சின்ன இடையுள்ளவள்; வெருண்ட மான் விழி நோக்கமுடையவள்; ஆழமான நாபியுடைவள்; இடை பருத்திருப்பதால் மெல்லிய நடை; தனங்கள் பெரிதாயிருப்பதால் கொஞ்சம் வணங்கிய உருவம். பெண்களுக்குள் அவள் பிரமனின் முதல் ஸ்ருஷ்டிபோல் விளங்கினாள்.

இவளைப் படைப்பதில் ஒளி நிரம்பிய சந்திரன் கர்த்தாவா? அல்லது சிங்காரதெய்வமான மன்மதன் கர்த்தாவா? அல்லது மலர் நிறைந்த வஸந்த கால தேவதை இவளைப் படைத்தானு ? மறைகளை ஓதி உணர்ச்சியே குறைந்து இந்திரியங்களை உலக விஷயங்களிலிருந்து

பின்னிழுத்த மனமுடைய ஆதி பிரம்ம முனிவர் இவளைப் படைக்கமுடியுமா?

இயற்கை அழகுள்ள இவளுக்கு மோகன கலைத்திற மையையும் கொடுத்தது பிரமன் ஒரு அம்பில் நஞ்சைத் தீட்டியதை ஒக்கும்.)

இதுவரையில் எனக்கு ஏற்பட்ட வாழ்க்கைச் சம்பவங்களில் இவ்வளவு மிக உயர்ந்த கலை அனுபவமும் அன்பு அனுபவமும் எனக்குத் தேவியின் அருளால் கிடைத்தது என்று உனக்குத் தெரியாதல்லவா?'' என்று கூறி நிறுத்தினர்.

''குருநாதா! எனக்கெப்படித் தெரியும்! நீங்கள் கூறியதைக் கேட்டபிறகு விக்கிரம மகாராஜா எப்படி வீரரச நிதியோ அப்படி நீங்கள் பல உத்தமரச நிதியாக இருக்கின்றீர்கள். 'காளிதாச ருடைய நூல்களில் சிருங்கார ரசமே முக்கியம். அவர் சிங்கார ரசவர்ணனையில் சமர்த்தர்'' என்று உலகம் புகழ்கின்றது. இப்பொழுதல்லவா தங்களுடைய நூல்களில் விப்ரலம்ப சிங்கார மும், கருணரசமும் ததும்பி இருப்பதற்குக் காரணம் தெரி கின்றது. அந்த உணர்ச்சியானது எப்படி அற்புத ரசம், சாந்த ரசம், பக்திரசம் என்ற ரசங்களின் உணர்ச்சியாகக் கனிந்தது என்று அறிய ஆவலுள்ளவனயிருக்கிறேன்.'' என்று பணிவுடன் கூறினேன்.

''குழந்தாய்! உன்னை என்மகனகவே கருதுகிறேன். எனக்குப் புத்ர பாக்யத்தை தேவி அருளவில்லை. சந்திர கலாதேவி பர தேவதையின் பாதாரவிந்தத்தை அடைந்தபிறகு நான் உயிர் வாழ்ந்தே இருக்கக்கூடாது. என் உயிரையே மாய்த்துக்கொள்ள முயன்றேன். தேவி தடுத்துவிட்டாள்'' என்று கூறும்பொழுது காளிதாசருடைய கண்களில் நீர் பொங்கி வழிந்தது.

இதைக் கண்ட என் மனம் துடித்தது. வெளிப்படையாக மிக சாந்தி நிறைந்து காணப்படுகிறவர்களுடைய உள்ளங்களில் எத்தகைய உணர்ச்சிப் பெரும்புயல் அடித்துக்கொண்டிருக்கிறது என்பதை அப்பொழுதுதான் என் இதயம் அறிந்தது. சற்று நேரம் கண்களை மூடி மெய்மறந்திருந்த என் குருநாதன் கண்களைத் திறந்து என்னை உற்று நோக்கினர். அப்பொழுது நான் மெது வாக, ''தாங்கள் தேவி சந்திர கலையை சந்தித்து, பிரேமித்து, மணந்த கதையை நான் கேட்கலாமா?'' என்றேன். அவர் ''மகனே! கேள். ஒருவரிடமும் நான் சொல்ல இஷ்டப்படாத அந்த இன்பமும், துன்பமும் கலந்த கதையை உனக்குக் கூறு கிறேன், கேள்'' என்றார். அப்பொழுதும் அவர் குரல் துக்கத் தினல் கரகரத்திருந்தது.

''நான் இமயமலையை தரிசித்துவிட்டு வரும்போது, காசியில் சில நாள் தங்கியதாகக் கூறினேனல்லவா? அங்கே கங்கையில் நீராடி, கோயில்களில் தரிசனம் செய்துகொண்டிருந்தேன். அச் சமயம் ஒருநாள் அன்ன பூரணிதேவி சன்னிதியில் ஒரு அதிசய அழகு வாய்ந்த இள மங்கையைக் கண்டேன். அவள் அவ்வூர் அரசனுடைய மகள் என்றும் அறிந்துகொண்டேன். அவள் மட்டும் தனியாக சன்னிதியில் இருந்தாள். நானும் இன்னும் மற்ற

வர்களும் வெளியில் இருந்தோம். கதவைத் திறந்துகொண்டு அவள் வெளியே வரும் சமயம் தன் பட்டு உத்தரீயத்தால் முகத்தை மூடிக்கொள்வதற்கு ஒருநிமிஷம் முன்னால், அவளுடைய அழகிய முகத்தைக் காணும் பாக்யம் எனக்குக் கிடைத்தது.

அதர: கிஸலய ராக: கோமல விடபானு காரிணௌ பாஹூ |
குஸுமமிவலோபனீயம் யௌவனமங்கேஷு ஸந்நத்தம் ||

(அவளுடைய கீழ் இதழ் தளிர்போல் சிவந்திருந்தது. அழகிய கிளைபோன்ற கைகள் அவள் உடலில் மலரைப் போல் மயக்கும் இளமை மிளிர்ந்தது.)

ஆனால் அந்தப் பெருங் கூட்டத்தில் அவள் என்னை நன்றாகக் கவனிக்கவில்லை. இருந்தபோதிலும் ஒரு நிமிஷம் அவளுடைய கண்கள் என்னைக் கண்டு பிறகு கீழே தாழ்ந்தன. அடுத்த நிமிஷம் அவள் முகமூடி யணிந்து, பல்லக்கில் ஏறி அரண்மனைக்குப் போய்விட்டாள்.

பாக்யாஸ்தமய மிவாக்ஷ்ணோ: ஹ்ருதயஸ்ய மகோத்ஸவ வாஸானமிவ |
த்வாரபிதானமிவத்ருதே: மன்யேதஸ்யாஸ் திரஸ்கரிணீம் ||

(அவள் திரைக்குள் மறைந்ததை என் கண்களின் பாக்கிய முடிவாகவும் தன் மனத்தின் திருவிழாவின் முடிவாகவும் என் தைர்யக்கதவின் தாழ்ப்பாளாகவும் கருதுகிறேன்.)

நானோ ஒரு பிச்சைக்கார ஏழை. அவள் அரசகுமாரி. நான் கண்ணெடுத்துக்கூட அவளைப் பார்க்கலாமா? ஆனாலும் என் இதயம் அவளுடனேயே சென்றுவிட்டது.

அன்றையதினம்முதல் ஒரு நாள்கூடத் தவறாமல் அன்னபூரணி அம்மனை தரிசனம் செய்வதற்குச் செல்வேன். என்றைக்காவது ஒருநாள் அந்த அழகி என கண்ணில் படமாட்டாளா? என்ற ஆசைதான் அச்சமயத்தில் என் மனதில் தோன்றிய—அலைபாய்ந்துகொண்டிருந்த—என் இதய உணர்ச்சிதான்; விக்ரமோர்வசியத்தில் நீ புகழ்ந்து கொண்டாடுகின்ற சுலோகத்தை எழுதினேன்.

கூடம்நூபுர சப்தமாத்ரமபிமே காந்தம் ச்ருதௌ பாதயேத்
பச்சாதேத்ய சனை: கரோத்பல வ்ருதே தூர்வீதவா லோசனே |
ஹர்ம்யேஸ்மின்னவதீர்ய ஸாத்வஸவசான் மந்தாயமானுபலாத்
ஆனீயேத பதாத்பதம் சதுராயாஸக்யாமமோ பாந்திகம் ||

(என் செவிகளில் அவளுடைய சிலம்புகளின் ஒலித்த ஒலியாவது விழாதா? பின்வந்து அவளுடைய மலர்க் கரங்களால் என் கண்களைப் பொத்துவளா? இந்த மாடியில் இறங்கி அவள் வெட்கத்தால் மெல்ல நடந்தாலும் ஸகியால் அடிமேலடியாக என்னிடம் அழைத்து வரப் படமாட்டாளா?)

அவள் கன்னி மாடத்தில், எப்படி எப்படி யிருப்பாளோ, அப்படியெல்லாம் நினைத்துக் கற்பனை செய்து எண்ணமிடுவேன். என்னை அன்புள்ள நினைவுடன் நினைப்பாளா! என்றெல்லாம் எண்ணி

ஏங்குவேன். அப்பொழுது என் பைத்தியக்கார மனம் பலவித மாக எண்ணமிட்டு எண்ணமிட்டு துன்பமடையும்.)

காமீஸ்வதாம் பச்யதி |

**(காதலன் எல்லாவற்றையும் தனக்கு அனுகூலமாகவே நினைப்பன்.)**

"காமம் ப்ரியாரை ஸுலபா மனஸ்துதத்பாவதர்சனுசீவாஸி
அக்ருதார்த்தேபி மனஸிஜே ரதிமுபய ப்ரார்த்தனு குருதே" ||

**(என் காதலி அடையக்கூடியவளல்ல. ஆனல் என் மனம் அவளுடைய காதலை அறிந்து இன்புறுகின்றது. காதல் நிறைவேருவிட்டாலும் இருவர் மனமொத்து ஆதரவு படுவதே பாமானந்தம்.)**

அனுக்ராதம்புஷ்பம் கிஸலயம லூனம் காருஹை:
அனுவித்தம் ரத்னம் மதுநவமனுஸ் பாதித ரஸம் ||
அகண்டம் புன்யானும்பலமிவ தத்ருபமனகம்
ந ஜானே போக்தாரம் கமிஹ சலமுபஸ்தாஸ்யதிவிதி: ||

**(அவள், முகராத மலர், நகங்களால் கிள்ளப்படாத தளிர், துளைவிடப்படாத ரத்னம்,சுவைக்கப்படாத தேன்; அவள் உருவம் புண்யங்களின் திரண்ட பயன்; யாரைக் கடவுள் அவளது நாயகனுகப் படைத்திருக்கின்ருரோ, அறியேன்.)**

அதுமட்டுமல்ல. எங்கேயாவது ஒரு அழகிய வஸ்துவைக் கண்டு விட்டாலோ, மதுரகானத்தைக் கேட்டாலும் என்னையுமறியாதபடி, என் மனதில் ஒரு இன்பக் கலக்கமுண்டாகும். ஏதோ முற்பிறவி களில் உள்ள ஆழ்ந்த நட்பு, அறிந்தும், அறியாத்துமாக இதயத் தில் ஒளி வீசுவதுபோன்ற உணர்ச்சி தோன்றும். அதைத்தான் என்னுடைய சாகுந்தல நாடக சுலோகத்தில் வெளியிட்டேன்.

ரம்யாணி வீக்ஷ்ய மதுராம்ச்ச நிசம்ய சப்தான்
பர்யுத்ஸுகீபவதியத் ஸுகிதோபி ஜந்து:
தச்சேதஸா ஸ்மரதி நூனமபோதபூர்வம்
பாவஸ்திராணி ஜனனந்தர ஸௌஹ்ருதானி ||

**(அழகான பொருட்களைக் கண்டும் இன்பமயமான கானங் களைக் கேட்டும் மனதிற்கு சுகநிலையில்கூட சஞ்சலம் ஏற்படுவது நன்கு அறியாமல் முற்பிறப்பு நட்பு வாசனை களை அனுபவிப்பதால்தான்.)**

அவளுடைய அன்பை அடைவதற்காக சக்கரவர்த்தி பதவியைக் கூட விட்டுவிடலாம்.

ஸாமந்த மௌலி மணிரஞ்சித பாதபீட
மேகாதபத்ரமவனேர்நததா ப்ரபுத்வம் |
அஸ்யா: ஸகே சரணயோ ரஹமத்ய காந்த
மாஞ்ஞாகரத்வமதிகம்ய யதா க்ருதார்த்த: ||

**[வணங்கும் எல்லா அரசர்களுடைய கிரீடங்களுடைய ரத்னங்களால் ஜ்வலிக்கும் என்னுடைய கால் பலகை யின்மேல் கால் வைத்து ஒரு குடையில் முழு உலகத்தை**

# என் சுய சரிதை


சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

B. A., L. T., M. L. C.


(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## 1937 கோடை விடுமுறை

என் சகோதரி பாலமும் அவள் கணவரும் கண்ணனூரில் இருந்ததால் எங்கள் குடும்பத்தினர் சிலர் விடுமுறையில் கண்ணனூர், உதகமண்டலம், குன்னூர், முதலான இடங்களுக்கும் மற்றும் சிலர் பாபநாசம் போய் அங்கிருந்து பொதிகை மலையிலுள்ள கன்னிகட்டி என்னுமிடத்துக்கும்போய்வந்தனர்.

ஜூன் மாதத்தில் என் சகோதரி பாலத்தின் புதல்வன் V. S. சுப்ரமணியனுக்கும் ஸ்ரீமதி கமலாவுக்கும் எங்கள் காலனியிலேயே மங்களகரமாக விவாகம் நடந்தது.

ஜூன் 7-ஆம் தேதியிலிருந்து 15உ வரைக்கும் நான், சித்தூரில் வேலையாயிருந்த என் சகோதரி ஸ்வர்ணத்துடன், அவள் பார்வையிடும் ஸ்கூல்கள் ஊர்கள் சிலவற்றை அவளுடன் பார்த்து வந்தேன். திருத்தணி, சோளங்கிபுரம், நகரி, பூனி மாங்காடு, திருவலத்தின் சமீபத்தில் பொன்னையாறு இத்தியாதி. சோளங்கிபுரத்தில் மலைமேல் கோவில், நகரிக்கு மலைப்பிரதேசமான இடத்தில், ஜனசஞ்சாரம் அதிகமில்லாத ஒரு இடத்தில். அதன் பக்கத்திலுள்ள நதியில் மலையடிவாரங்களில் அடியிலிருந்து வரும் ஒரு ஊற்று ஜலம் பசுக்களின் உருவம்போல் கட்டப்பட்டுள்ள கோமுகங்களிலிருந்து அருவிகள்போல் கொட்டும் காட்சி நிரம்ப அழகு.

ஜூன் 16-ஆம் தேதி வித்தியாலயம் திறக்கப்பட்டது. (Preparatory) என்னும் ஆரம்ப வகுப்பில் சேர்வதற்கு வயதான பெண்கள் புருஷனையிழந்தவர்கள் அநேகர் வந்தனர். வெளியூர்களில் சிறுவயதில் பெண்களை பாடசாலைக்கு அனுப்பு

---

ஆள்வதைவிட இவளுடைய பொன்னடிகளுக்கு இன்பப் பணிவிடை செய்வதே பிறவியின் மிக உயர்ந்தபயன்)

சில சமயங்களில் அவளுக்கு என்னிடம் பூர்ண அன்பிருந்தால் அதுவே போதும். மணம் தடைபட்டாலும் அன்யோன்ய அன்பு இருந்தால் அதுவே பரமானந்தம் என்று தோன்றும்.

அனுது ரோத் கண்டிதயோ: ப்ரஸித்யதா
ஸ்மாகமேனுபி ரதிர் நமாம் ப்ரதி |
பாஸ்பர:ப்ராப்தி நிராசயோரீ வரம்
சரீர நாசோபி ஸமானுராகயோ: ||

[அன்பற்றவளுக்கும் அன்புள்ளவளுக்கும் அல்லது அன்புள்ளவனுக்கும் அன்பற்றவனுக்கும் ஏற்படும் காம இன்பத்தைவிட சமமான உயர்ந்த அன்புள்ள இரு காதலர்கள் மரணமே உயர்ந்தது.]

(தொடரும்)

வதே அபூர்வம். அப்படி யனுப்பினாலும் அவிடத்துப் படிப்பு கிரம்ப மோசம். 4-ஆவது, 5-ஆவது வகுப்பு வரைக்கும் படித்திருக்கிறேன் என்பார்கள். ஆனால் 2-ஆவது வகுப்புக்குள்ள அறிவுகூட இராது. இப்படிப்பட்ட பெண்களை யெல்லாம் ஆரம்ப வகுப்பில் வைத்து அதற்கு ஒரு பிரத்தியேகமான உபாத்தினியை ஏற்படுத்தி 2, 3 வருஷத்துப் பாடங்களை ஒரு வருஷத்தில் அவர்களுக்குக் கற்பித்து 8-ஆவது வகுப்புக்குத் தயார் செய்வது வித்தியாலயத்தில் ஒரு முக்கிய அம்சம்.

ராஜமகேந்திர வாசம்

என் வருஷ ஓய்வு (லீவு) முடிந்தவுடன் ராஜமகேந்திரத்தில் கவர்மெண்ட் பாடசாலைத் தலைவியாக என்னை அனுப்பினார்கள். வித்தியாலயம் ஆரம்ப வகுப்புக்குக்கூடத் தகுதியில்லாத இரண்டு பெண்கள் காமாக்ஷி, லக்ஷ்மி இருவரையும் அழைத்துக் கொண்டு அங்கு சென்று, ஜூன் 24-ஆம் தேதி பாடசாலை வேலை ஆரம்பித்தேன். டாக்டர் லக்ஷ்மீபதியவர்களின் பெண் அன்னபூர்ணா என்னும் விமலாவும் அவள் கணவரும் அந்த ஊரிலிருந்தார்கள். தனவாயி குண்டா என்னும் இடத்தில் 30 ரூபாய்க்கு ஒரு அழகிய வீடு வாடகைக்கு அமர்த்தியிருந்தாள். அங்கிருந்து பாடசாலை 2 மைல். ஜட்கா ஒன்று போய்வர. ராஜமகேந்திரத்திலிருந்த 1 மாதமும் ஸ்ரீமதி விமலாவும் அவள் குடும்பத்தினரும் எனக்கு கிரம்ப உதவியாயிருந்தனர்.

பாடசாலை கோதாவரி நதிக்கரைமேல் இருக்கிறது. மாடி வராந்தாவிலிருந்து நதியின் காட்சி கிரம்ப அழகு. அந்த சமயம் நதியில் பூரண பிரவாகம். பாடசாலைக்கு 2 கட்டிடங்கள், 2 ஹாஸ்டல்கள். ஹைஸ்கூல், உபாத்தினிமைத் தொழில் வகுப்புக்கள்; எல்லாம் தெலுங்கு. எனக்கும் மறந்து போயிருந்த தெலுங்கு பாஷையை நன்றாகப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

நான் போன 1 வாரத்துக்குள் பரிசளிப்புவிழா, பிப்ரவரி மார்ச் மாதத்திலேயே நடந்திருக்கவேண்டியது பல காரணங்களால் ஒத்திப்போடப்பட்டதாம். சில உபாத்தினிகள் மாற்றப்பட்டு புதிய உபாத்தினிகள் வந்திருந்தார்கள். இவர்களுக்குக் கால அட்டவணை (Time-table) தயாரிப்பது, பாடசாலையை ஒழுங்குபடுத்துவது, ஹாஸ்டல்களில் புதிய மாணாக்கிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள், அவிடத்து கணக்குகள் எல்லாம் மாலை 6 மணி வரைக்கும் ஆகிவிடும். அங்கிருந்த 4 வாரங்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் ஏதாவது ஒரு புதிய இடம் பார்ப்பதற்கு ஏற்பாடுசெய்து என்னை அழைத்துப் போவாள், ஸ்ரீ விமலா. (Steam launch) இலேயே தவலேசுவரம், கோடிபல்லி, தாக்ஷாராம் முதலான இடங்கள். கோதாவரி நதியின் கோடிலிங்கம் முதலான ஸ்நான கட்டங்கள். காளம் ராமலிங்கையகாரு அவர்களின் ஸம்ஸ்க்ருத கலாசாலை,

ஸ்ரீமதி காமாக்ஷியம்மாள் அவர்களின் தலைமையில் கிரம்ப நன்றாக நடக்கிறது. ஸ்ரீமான் வீரேசலிங்கம் பந்துலு அவர்கள் ஆசிரமம்;...இவற்றையெல்லாம் பார்த்து வந்தோம். அந்த ஊர் மாதர் சங்கத்தில் என் கீதை உபந்நியாசம் ஒருநாள்.

ஏப்ரல் மாதத்தில் இடைக்கால மந்திரிசபை ஒன்று, ஸர். கே. வி. ரெட்டி, ஸர் உஸ்மான் ஸாஹேப், ஸ்ரீ. பன்னீர் செல்வம் இந்த மூவருடன் அமைந்தது. ஜூலை மாதத்தில் முதல்முதலாக ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார் தலைமையில் காங்கிரஸ் மந்திரிசபை அமைந்தது, நம் ராஜதானிக்கே கிரம்பப் பெருமையையும் சந்தோஷத்தையும் உண்டாக்கிற்று. அரசாங்க நிர்வாகப்பொறுப்பு முதன்முதலாக இந்தியர்களிடமே ஒப்பிக்கப்பட்டதைப் பற்றி ஜனங்களுக்கு உத்ஸாகமும் ஊக்கமும் ஏற்பட்டது.

என் சகோதரி பெண், டாக்டர் சாந்தா, 6 மாதம் லீவு எடுத்துக் கொண்டு லண்டன் F. R. C. S. பரீக்ஷைக்குப் படிப்பதற்காக சென்னைக்கு வந்தாள். திடீரென்று 21-ஆந் தேதி என்னை மறுபடியும் சென்னையில் லேடி வெல்லிங்டன் பாடசாலைக்கே மாற்றியிருப்பதாகவும் உடனே சென்று வேலை ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும் தந்தி வந்தது. ஜூலை 23-ஆந் தேதி பாடசாலை முதல் உதவி ஆசிரியை Mrs. ஜான்ஸ்டன் என்பவளிடம் பாடசாலை நிர்வாகத்தை ஒப்பித்து விட்டு 24-ஆந் தேதி புறப்பட்டேன். அந்த ஊர் காலேஜில் ஸ்ரீமான் D. S. சர்மா அப்போது பிரின்ஸிபாலாயிருந்தார். அவர் மனைவி அன்று எனக்கு Car அனுப்பி எல்லோரும் வந்து ஸ்டேஷனில் வழியனுப்பினார்கள். ஒழிந்த வேளைகளில் கணக்கு, பாடம் சொல்லிக்கொடுப்பதாக ஒப்புக்கொண்ட விமலாவுக்கு உதவியாக காமாக்ஷியை விட்டுவிட்டு லக்ஷ்மியை மாத்திரம் அழைத்துக்கொண்டு சென்னை திரும்பி லேடி வெல்லிங்டன் பாடசாலையில் 28-ந்தேதி வேலை ஒப்புக்கொண்டேன். மறுநாள் என் தாயாருடைய இரண்டாவது வருஷ பூஜையும் சுமங்கலி பூஜையும் நடந்தது.

என் சகோதரி பாலத்தின் கணவர் (Captain) V. R. சுந்தரேசன், ஜெனரல் ஆஸ்பத்திரியில் R. M. O. ஆக மாற்றப்பட்டு கண்ணனூரிலிருந்து குடும்பத்துடன் வந்து ஆஸ்பத்திரியிலேயே தங்கினார்.

மைகல்மஸ் லீவில் சித்தூரில் ஸ்வர்ணத்திடம்போய்ச் சற்று கிம்மதியாக இருந்து L. T. வகுப்புக்கு நான் கற்பிக்க வேண்டிய விஷயங்கள் அடங்கிய புத்தகங்கள் சிலவற்றைப் படித்தேன். இந்த அவகாசம் சென்னையில் இருப்பதில்லை.

அந்த வருஷம் எல்லாரும் சென்னையில் சேர்ந்து இருந்ததால், நவராத்திரி தீபாவளியெல்லாம் சற்று விசேஷமாகவே கொண்டாடப்பட்டது. கிறிஸ்துமஸ்விடுமுறையிலும் நாளுத்மா கான்பரன்ஸ் எங்கள் குடும்பத்தில் சிறப்பாக நடந்தது.

# வாழ்க்கைக் குறிப்பு

[ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்]

7L
N54:3
18312

ஜகன்மோஹினியில் இத்தப்பகுதியைப் படித்ததும் சிலநாட்களுக்கு முந்தி என் அனுபவத்தில் நடந்த சம்பவம் ஒன்றை எழுதி அனுப்பவேண்டும் என்று என் உள்ளம் தூண்டிற்று.

ஹைதராபாதில் ஒவ்வொரு ஜனவரி மாதத்தொடக்கத்திலும் அகில இந்திய தொழில் மற்றும் கலைப் பொருட்காட்சியொன்று வெகு வைபவமாக நடைபெறுவது வழக்கம். அதே போல் இந்த வருடம் ஜனவரி ஒன்றும் தேதியன்று இந்நகரின் நாமபள்ளி எக்ஸ்டென்ஷனில் உள்ள பிரம்மாண்ட காந்தி பவனின் பின்புறம் பொருட்காட்சி எப்பொழுதையும்விட பதின்மடங்கு அதிக வைபவத்துடன் தொடங்கி இன்னும் நடந்துகொண்டிருக்கிறது.

இத்தப் பொருட்காட்சியைப் பார்வையிட நானும் ஒரு நாள் சென்றிருந்தேன். ஔரங்காபாத் ஸில்க் ஸ்டாலில் நுழைத்தபொழுது அங்குள்ள அற்புதமான பட்டுப் புடவைகள் என் மனதைக் கவர்ந்தன. வழவழப்பான மெல்லிய பட்டில், கவர்ச்சிகரமான பார்டர்களுடன், அழகழகான வர்ணங்களில் மலிவான பட்டுப் புடவைகள் குவிந்துகிடந்தன. என் பெண்குழந்தைகள் இருவருக்கும் பொங்கல் பரிசாக ஒவ்வொரு புடவை வாங்கி அனுப்பலாம் என்று இரண்டு புடவைகளைப் பொருக்கி எடுத்தேன்.

கடையில் கூட்டம் சொல்லிமுடியாது. கடைக்கார சேவகப்பையன் பொட்டளத்தைக் கட்டிக்கொடுத்து, பில் எழுதிக் கொடுப்பதற்குள் நான் அந்த நெருக்கடியில் வெந்து போய்விட்டேன். பணத்தைக் கொடுத்துவிட்டு, புடவை பொட்டளத்தையும், பில்லையும் பெற்றுக்கொண்டு செத்தேன் பிழைத்தேன் என்று வெளியே வந்தேன்.

* * * * *

இரவு போஜனம் முடிந்ததும், பாக்கி அலுவல்களை முடித்துக்கொண்டு வந்து, அன்று எக்ஸிபிஷனில் வாங்கிவந்த சாமான்களையும், சிலவையும் கணக்குப்பார்த்துச் சிலவைக் கணக்குப் புத்தகத்தில் எழுத உட்கார்ந்தேன். என்ன விந்தை! அந்தப் புடவைக்கடை சேவகன் இரண்டு புடவைகளுக்கு 'பில்' கொடுத்து முப்பது ரூபாய்கள் வாங்கிக்கொண்டு மூன்று புடவைகளை 'பேக்' பண்ணிகொடுத்து விட்டிருக்கிறான்! அச்சமயம் என் அருகில் உட்கார்ந்திருந்த என் புத்திரன் ஸ்ரீதரனிடம் ''இப்போ என்ன செய்வது, ஸ்ரீதர்? நாளைக்கு மறுபடியும் எக்ஸிபிஷனுக்குப்போய் புடவையைக் கடைக்காரனுக்கு வாபஸ் பண்ணியாகணும்'' என்றேன்.

''போம்மா! நீ பேசாமே வைத்துக்கொள்! அந்த ஸேட்டுக்கு நன்றாக வேண்டும், இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும், ஒவ்வொரு புடவைக்கும் தகுந்த விலைக்குமேல் பொய்விலை கூட்டிப்போட்டு அநியாய லாபம் சம்பாதிக்

கிருன்மா. அந்தக் கொள்ளைக்காரனுக்கு இந்தப் பதினைந்து ரூபாய் லக்ஷியமா? சும்மா வைத்துக்கொண்டுவிடு'' என்றான். ஸ்ரீதரன் சொல்வது உண்மைதான் என்று எனக்குப்பட்டது. ஆனால் உடனே என் உள்ளம் அந்தக் கடைக்கார சேவகன் பால் பச்சாத்தாபப்படத் தொடங்கிற்று, ''கடையின் 'ஸ்டாக்' கணக்கு எடுக்கும்பொழுது ஒருபுடவை குறைவு வந்தால், கடைமுதலாளி அந்தச் சேவகனின்மேல் பழிசுமத்தி, வேலையிலிருந்து ஓட்டித்துலைப்பானேடா, கண்ணே!'' என்றேன்.

''அந்த மடப்பயலுக்கு இந்தத் தண்டனை தகும்; பின் எனும் அஜாகிரதையாக இருந்தான்?''

''இல்லை, ஸ்ரீதர்! கடையில் ஒரே கும்பல். நிறைந்துபோய் விட்டோம். அந்த கடுபிடியில் இந்த ஒரு ஆள்தான் அத்தனை பேருக்கும் பதில் சொல்லியாகவேண்டும். கடைமுதலாளி ஹாயாக சாய்ந்துகொண்டு அதிகாரம் பண்ணிகொண்டிருந்தான். ஏதோ தற்செயலாகத் தவறு நடந்துவிட்டது. அந்த ஆள்காரப்பையன்தான் என்ன செய்வான், பாவம்.

''சரி, அம்மா! நாளைக்குப் புடவையைக் கொண்டுபோய் வாபஸ் பண்ணிவிடு. ஆனால் அந்த முதலாளிக்கு இந்தச் செய்தியைத் தெரிவித்துவிடாதே. தெரிந்தால், இப்பொழுதும் அந்தத் தடியன், பாவம்!... அந்தச் சேவகனை வேலையிலிருந்து ஓட்டினாலும் ஓட்டிவிடுவான்''

''அவனிடம் யார் போய்ச் சொல்லப்போரார்? நீ போய் நிம்மதியாகத் தூங்கு'' என்றேன்.

மறுநாள் மாலை இதற்காகவே எக்ஸிபிஷனுக்குப்போய் அந்தக் கடைக்காரப் பையனிடம் புடவையை வாப்ஸ் கொடுத்துவிட்டு ரகசியமாக அவன் செய்த தவறைத் தெரிவித்தேன். அவன் என்ன செய்தான் தெரியுமா? அந்தப் புடவையை என்னிடமே திருப்பிக் கொடுத்துவிட்டு எனக்கொரு பெரிய கும்பிடுபோட்டான். ஹிந்திபாஷயில், ''தர்ம லக்ஷ்மீ, உன்னைப்போன்ற நல்ல மனிதர்கள் இருப்பதால் தான் உலகில் கொஞ்சம் மழைபெய்கிறது. என்னுடைய இந்தத் தவறை யஜமானிடம்போய்ச் சொல்லி இருந்தாயோ, உடனே வேலையைவிட்டு நீக்கிவிட்டிருப்பார். என்னைப் பெரிய சங்கடத்திலிருந்து காப்பாற்றினாய். இந்தப் புடவையை என் நன்றி அறிதலின் அடையாளமாக நீயே வைத்துக்கொள். தாயே! இதற்குண்டான விலையை எஜமானிடம் புடவை விலைபோனதாகக் கூறிக் கொடுத்துவிடுகிறேன்'' என்று என்னவெல்லாமோ என்னைப் புகழ்ந்து கூறினான்.

''வேண்டாம்டா, குழந்தை! உன் நினைவுக்காக இந்தப் புடவையை வேண்டுமானால் நான் வைத்துகொள்கிறேன். ஆனால் இதன் விலையைப் பெற்றுக்கொள். ஏழையிடம் நான் இனும் பெற்றுகொள்வதா?'' என்று அவன் கையில் மூன்று ஐந்து ரூபாய் நோட்டுக்களைத் திணித்துவிட்டுப் புடவையுடன் விடுவிடுவென்று வெளியே வந்துவிட்டேன்.

# வாழ்க்கை தீபம்

வை. மு. கோ.

ஸௌபாக்யவதி லக்ஷ்மிக்கு மங்களமுண்டாகுக! உபய க்ஷேமங்கள். இத்தனை நாட்களாக நீ எழுதிய கடிதங்களை விட இம்முறை நீ எழுதியுள்ள கடிதம் மிகமிக ஸ்வாரஸ்யமாயும் எனக்குப் பிடித்தமாயுமிருக்கிறது. என்னுடைய கடிதத்தினால் உன் நாத்தனாருக்கு ப்ரமாதமான கோபம் வந்து விட்டதாயும், இன்னும் சிலர்கூட என்னைத் திட்டியதாயும் நீங்கள் ஏன் இம்மாதிரி வரதக்ஷிணைக் கண்டனம்செய்து ஆத்திரத்துடன் எழுதி சிலர்களுடைய த்வேஷத்திற்குப் பாத்திரமாகவேண்டும் என்றும் நீ எழுதியிருக்கிறாய். லக்ஷ்மீ! அதை நான் மிகமிக வரவேற்கிறேன். இதற்காக நான் கோபப்படவில்லை ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன், கேள்!

நம்முடைய பாரத நாட்டின் அடிமைத்தளையை நீக்கி அதன் தலைவிதியைப்போக்கி இன்று மற்றப நாடுகளைப்போல் சுதந்திரமாய்த் தலைநிமிர்ந்து கம்பீரமாய் நிற்கும் முறையில் பூர்ண சுதந்திரத்தை அடைந்திருக்கிறோம். ஆனால் ஆதியில் இந்த மகத்தான காரியத்தைச் செய்ய காங்கிரஸ் மகா சபையை ஸ்தாபித்தபோதும், பிறகு வழிவழியாகத் தலைவர்கள் தோன்றி உழைத்தபோதும், இதே பாரத நாட்டின் அடிமை புத்தியில் ஊன்றிப்போயிருந்த மக்கள் எத்தனை எதிர்த்தார்கள்! எத்தனை பரிகஸித்தார்கள்! அன்னிய ஆட்சிக்கு ஆதரவளித்துக் காட்டிக்கொடுத்து நம்மவர்களே நம்மவர்களைத் தண்டிக்கவும் சிறையிலிடவும் சவுக்கடி கொடுக்கவும் லத்தி சார்ஜ்செய்யவும் பொருளைப் பறிமுதல் செய்யவும் .... அப்பப்பா! நினைத்தாலும் தேகம் நடுங்கி மயிர்க்கூச்செறிகின்றது! அத்தகைய விபரீதமான அக்ரமமான காரியங்களைச் செய்து எதிர்த்தபோதும் காங்கிரஸ் சபையோ, அதைச் சார்ந்தவர்களோ, சிறிதாவது சளைத்தார்களா?..... பின்வாங்கினார்களா? உயிரையும் கொடுத்து உழைத்து சுதந்திரத்தை வாங்கியே கொடுத்தார்கள். அன்று எதிரிகளாயிருந்து அட்டகாஸம் செய்த சகலரும் இந்த சுதந்திர நாட்டில்தான் உரிமையுடன் வாழ்கிறார்கள், தெரிந்ததா! அதுபோல் இது மகத்தான நாட்டின் விஷயம் அல்ல; இது ஒரு சின்ன விஷயந்தானே என்று எண்ணலாம். சிறிய புண்தான் புரையோடி காலையோ, கையையோ வெட்டும்படியாக்கிவிடுகிறது. சிறிய கடன்தான் மலைபோல் வளர்ந்து உயிரையே குடித்து ஏப்பம் விட்டுவிடுகிறது. சிறிய குற்றந்தான் மகத்தான பாவக்குவியலுக்குப் பங்குதாரியாக்கிவிடுகிறது.

இதுபோல் உள்ள உதாரணங்களைச் சொல்லிக்கொண்டு போனால் முடிவேஇல்லை. உனக்குப் புரிவதற்காகச் சிலவற்றைக் கூறினேன். ஆகையால் சமூகத்தில் இந்த வரதக்ஷிணை என்பது மகா கொடியது. இதைவிட பயங்கரமானது வேறில்லை

என்பதை யார் எதிர்த்தாலும் என்னைத் திட்டினாலும் அதை நான் விடப்போவதே இல்லை. சமயம் வாய்க்கும்போதெல்லாம் சக்கைபோடு போட்டுத்தான் தீருவேன் "எறும்பூரக் கல்லும் தேயும்" என்பார்கள். அதுபோல் இதுவும் சொல்லச்சொல்ல பலன்கிடைக்குமேயன்றி கிடைக்காமல் போகாது. வரதக்ஷிணை என்கிற பிசாசின் பயங்கரத்தினால் உள்ள தீமைகளை இந்தப் பிள்ளைவீட்டுக் கொள்ளைக்காரர்கள் அறிவதே இல்லை. ஆனால் தங்கள் பெண்களுக்குக் கல்யாணம் செய்யும்போதுமட்டும் நன்றாக அறிந்து பேசுவதை நான் பலபேர் வாயிலாகவே கேட்டிருக்கிறேன். என பிள்ளைக்கு வந்ததுபோல் நான் கொடுக்கவோ சீர் செய்யவோ முடியுமா? நான் ஸம்ஸாரி; எனக்குச் சரியான இடமாகப் பாரு" என்று வெட்கமில்லாமல் பேசுகிறார்கள். ஆகையால் இந்த அனர்த்தத்தைத் தெரியும் வரையில். எல்லோரும் சேர்ந்து போராடித்தானாக வேண்டும். உன் நாத்தனாரிடம் இக்கடிதத்தையே கொடுத்துப் படிக்கச்சொல்லு இன்னும் சற்று நன்றாகத் திட்டட்டும் நீயும் இந்தப் பூச்சி மிரட்டலுக்குப்பயப்படாதே. தற்காலம்சில சினிமாக்களால் உலகம் கெட்டுப்போவதையும்,வரதக்ஷிணையினால் குடும்பங்களே நாசமாவதையும் நான விடப்போவதே இல்லை!

லக்ஷ்மீ! நீயும் உங்கள் நாத்தனார் முதலானோரும் ஒரு பெரிய இடத்தில் மகனுக்கு விலைபேசிப் பேரம் செய்யச் சென்றிருந்ததாயும், அங்கு உங்கள் நாத்தனாரே மனம் நோகும்படி அலக்ஷிய பாவத்துடன் நடந்து கொண்டு பேசினார்கள் என்றும் எழுதியிருக்கிறாயே; இந்த அனுபவத்தைக் கண்டறிந்த பிறகுகூடவா உன் நாத்தனாருக்கு புத்தி வரவில்லை! பணக்காரப் பேர்வழிகள் சிலரிடம் பழகுவது பாம்புடன் பழகுவதுபோலத்தான் என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டுவிட்டேன். எத்தனை உயர்ந்த பணக்காரர்களானாலும் அவர்களுக்கு சில சமயம் இரண்டெழுத்து 'மதி' என்பது மந்தித்துப்போய்விடுகிறது!......நாம் இந்த உலகத்திலேயே சிறந்தவர்கள், மற்றவர்களெல்லாம் கேவலம நாய் போன்றவர்கள்........ஏழைகள், பனாதைகள், கீழ்த்தரமானவர்கள்...என்கிற மனோபாவத்துடன் "சடபுட"வென்று வார்த்தைகளைக் கொட்டியளந்து மட்டந்தட்டிப் பேசிவிடுவர்.

தம்முடைய வீட்டிற்கோ, பிறந்த வீட்டிற்கோ, புகுந்த வீட்டிற்கோ, மற்றபணக்காரர்கள் ஈடுமில்லை, எதிரும் இல்லை. எங்க வீட்டின் வெந்நீர் விடுதிக்கு நிகர் இவர்களுடைய பங்களா வருமா? என் பிதா...என் மாமனார்,என் தமையன்... என் மாமா......இவர்களுடைய பட்டம், பதவி, பணம், செல்வாக்கு, மதிப்பு ...இவைகளில் ஆயிரத்தில் ஒரு அளவு அவர்களுக்கு வருமா? கல்வி, செல்வம், அறிவு, அனுபவம், ஆற்றல் ...முதலிய சகலத்திலும் தங்களுக்குநிகர் தாங்கள்தான்; பிறர் வெறும் மண்டூகங்கள்!...என்கிற அபிப்ராயத்துடன் தூக்கி

எறிந்து பேசி மனத்தைப் புண்ணாக்கி மாறாத வடுவை உண்டாக்கிவிடுவார்கள். அவ் வடுவை ஆற்றவும் முயற்சிப்பார்கள். பணம்! பணம்!...என்ற பெருமையில் சிலருக்கு சில சமயம் இத்தகைய நிலைதடுமாற்றம் உண்டாகிவிடுவது சகஜம். தங்கள் பெண்ணுக்குத் தக்கவரன், சரிக்குச்சரியான சம்மந்தம் இது இல்லை என்பது அவர்களுடைய நோக்கமாக இருக்கலாம். அதனால்தான் அத்தகைய அலக்ஷியமனோபாவத்துடன் நடந்துகொண்டிருக்கலாம். லக்ஷ்மீ! இதெல்லாம் எனக்குப் புதிதே இல்லை. என்னுடைய அனுபவத்தில் கணக்கற் புதுமைகளை நான் கண்டிருக்கிறேன். பணம் இருந்துவிட்டால்மட்டும் பெருமையும் அழியாத புகழும் உண்டாகிவிடாது. அதைச் சிறப்புறச் செய்யும் குணமும் பணிவும் கோபமற்றவிதமான தன்மையும் இல்லாவிட்டால் பணம் பரிமளிக்காது. இந்தப் பாடம் கற்றபிறகாவது உன் நாத்தனார் மற்றவர்களை மதித்து கர்வத்தைவிட்டு நடப்பாளா பார்க்கலாம்?

லக்ஷ்மீ! பணமிருக்கட்டும், பட்டங்களிருக்கட்டும், சிறந்த குணமும் பக்தியும் ஒவ்வொருவரிடமும் நிரம்பியிருந்தால் அதுவே தக்கபலனையளிக்கும். வீண்பெருமையில் பொழுதைப் போக்கும் சுபாவம் சிலருக்கு அபாரமாயிருக்கிறது! ' என் கைராசி அப்படி! என்கால் ராசி இப்படி! நான் ஒருபொருளைத் தொட்டு விட்டால் போதும், தங்க மயமாகி விடும்! வாசலில் போகும் கீரைக்காரி முதல் சகலரும், 'அம்மா! உன் கையால் தொட்டுவிடு, போதும்' என்று என்னை நச்சரித்து விடுகிறார்கள். எந்த விஷயத்திலும் என் குடும்பத்தினர், உறவினர், சிநேகிதர் எல்லோரும் என்னைத்தான் யோசனைகேட்டு முதல் முதல் கையால் ஆரம்பிக்கச் சொல்வார்கள். நான் கண்ணால் பார்த்தால் போதும்; தொட்டால் போதும்''...என்றெல்லாம் மிகமிக சுலபமாய்ப் பெருமையடித்துக்கொள்கிறவர்களைப் பார்த்தாலே எனக்குச் சிரிப்பாக வருகிறது. ஒரு பெரிய பணக்காரர் வீட்டுக் கல்யாணம் சிறப்பாக நடந்தது என்றால் ...இத்தனையும் நான்தான் செய்து முடித்தேன், யோசனை கூறினேன், ஓடியாடித் தாண்டவம் புரிந்தேன்...என்பார்கள். கல்யாணக்காரர்களிடம் என்றாவது இதைப்பற்றிக் கேட்கும் போது இத்தனை பெருமையும் வெறும் வ்ரட்டு ஜம்பந்தான் என்று நன்றாகத் தெரிந்துவிடுகிறது. உலகத்தில் இது போன்ற விசித்திரங்கள் ஒன்றா? இரண்டா?...எத்தனையோ இருக்கின்றன!

இத்தகையவர்களுக்கு வேறு கவலையோ, ஜோலியோ இருப்பதாகவே தெரிவதில்லை. தாய் தந்தையர்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்துத் தமது வயிற்றை வாயைக் கட்டிப் பணமனுப்பினால் ஹாஸ்டலில் தின்றுகொண்டு காலேஜ் படிப்பு படித்துக்கொண்டு குஷியாய்க் கவலையே யற்று ஆட்டமாடி மைனர் வாழ்க்கை வாழும் நிலைமை இருக்கிறதே!.. சோதாத்

தனமாய்க் கத்துவதும் கூக்குரலிடுவதும்தான் தம் கடமை என்று நினைக்கிறார்கள், பாரு!... அம்மாதிரியான மனோபாவத்தைச் சேர்ந்ததுதான் மேலே கூடியவர்களின் பெருமைப் புராணப்பகட்டுகள்!

லக்ஷ்மீ! நான் பொன்னியூர் ஹாஸ்டல் மாணவர்களை ஒரு விழாவில் சந்திக்க நேர்ந்தது. அடேயப்பா! வாலில்லாக் குரங்குகள் என்று எங்கபாட்டி துஷ்டப் பையன்களைப் பார்த்தால் சொல்வாள். இந்த மைனர்களை என்னவென்றுதான் சொல்வது என்றே தெரியவில்லை. ஒரு பாட்டுப்போட்டி ஹாஸ்டலில் நடந்தது. பாடுகிறவர்களையும் அலக்கழித்து அங்கு முக்யமாக வந்துள்ள ப்ரமுகர்களையும் வெறுப்புறச் செய்து என்ன விபரீதமாக நடந்துகொண்டார்கள் தெரியுமா?

ஓரே சீட்டியடிப்பதும் விசிலடிப்பதும், கிறுக்குப் பிடித்தது போல் கூச்சலிட்டுக் கத்துவதும், கைதட்டிச் சிரித்து கலாட்டாசெய்வதும், பரிகஸித்து எக்காளமிடுவதும், பார்க்கப் பார்க்க எனக்கு வந்த ஆத்திரம் சொல்லிமுடியாது. ஐயோ, பாவம்! இத்தனை மக்களையும் அனுப்பியுள்ள பெற்றோர்கள் இத்தகைய ஷோக் மைனர்களின் செய்கையைக் கண்டால் எப்படி வயிறெரிவார்கள்! இத்தகைய மூர்க்க குணமும் பிற்போக்கான தாத்தில் செய்கையும் உடைய இவர்கள் என்னதான் படித்துப் பாஸ்செய்து தம் பெற்றோர்களையும் மற்றோர்களையும் காப்பாற்றப் போகிறார்கள்! இவர்களால் தேசம் எத்தகைய க்ஷேமத்தை அடையப்போகிறது!... மனிதர்களாகப் பிறந்தும் மனிதத்தன்மை வேண்டாமா? மிருகம்போலவா வாழ்வது? இத்தகைய கேவலமான குணங்கள் வாழ்க்கையில் ஊன்றிவிட்டால் எப்படித் திருந்தி நல்வழிப்பட முடியும்? உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் எல்லாம் இத்தகைய சகவாஸதோஷத்தினால் பீடி ஸிகரேட்டுகள் பிடிப்பதும் ஓயாது சினிமா போவதும் ஊதாரித் தனமாய்த் திரிவதும் தன் பெயரைத்தான் பாழாக்கிக் கொள்வதும்... இதற்காகவா காலேஜ்படிப்பும், ஹாஸ்டல்வாழ்க்கையும் நம்பி அனுப்பினோம்... என்று பெற்றோர்களின் வயிறு பற்றி எரியுமல்லவா? நல்ல உயர்ந்த முறையிலுள்ள ஹாஸ்டலின் பெயர்கள்கூட இத்தகைய உதவாக்கரைப் பிள்ளைகளால் பாழாகிவிடுப்போல் பயங்கரமாயிருக்கிறது. வீட்டுக்கவலையோ, சம்ஸாரக் கவலையோ இல்லை என்றாலும் தான் நன்றாகப்படித்துப் பாஸாகி நல்ல பெயரெடுத்துத் தன் பெற்றோரின் உள்ளங்கள் பூரிக்கும்படி நடக்கவேண்டும்... உயர்ந்த படிப்புகளைப் படித்ததன்பலனை நல்ல உத்தமமான சிறந்த உத்யோகங்களை வகிக்கவேண்டும்... என்கிற எண்ணங்கள்கூடவா இல்லாமல் வரண்டு சூனியமான பாலைவனம்போலாகிவிடுகிறார்கள்?

பாவம்! அன்று என்கண்முன்பு அத்தனை பிள்ளைகளின் பெற்றோர்களுடைய முகங்கள்தான் தோன்றியது... அவர்கள்

எதிர்பார்ப்பென்ன! இந்த அடங்காப்பிடாரிகளின் அட்ட காஸமென்ன! இதனால் அடையப்போகும் எதிர்காலவாழ்க் கையின் பரிபவமென்ன! அடேயப்பா! பயங்கரத்திலும் பயங் கரம்!! ஏதோ. பிள்ளைகள் உத்ஸாகமாய், ஜாலியாக இருக்க வேண்டுவதுதான். அதற்கும் ஒரு எல்லை இல்லையா? பாதம் அல்வா ருசியாயிருக்கிறதென்று ஒரே மூச்சில் பூஷணிக்கா யளவு தின்றுவிட்டால் அதன்பலன் என்னவாகும்? அஜீர்ணக் கோளாறில் முடியும் என்பதைச் சொல்லவேண்டுமா? அதைப் போல் பொழுதுபோக்கிற்குச் சற்றுவிளையாடலாம்; உல்லாஸ மாய் நடக்கலாம்; என்றாவது சினிமா, கச்சேரி...முதலியவை வற்றுக்குப்போகலாம். மற்றப்படி ஒழுங்கானமுறையில் அடக்க மாய் பயபக்தியுடன், பக்திச்ரத்தையாய்ப் படித்துப் பாஸ் செய்து நல்ல பெயருடன் வெளியேற வேண்டாமா! உண்மை யில் நல்ல உத்தமனாக இருக்கும் பிள்ளைகளையும் வீணாக்கிக் குட்டிச்சுவராடித்துவிடுவார்கள் என்ற பயமே எனக்கு உண் டாகியது. மைனர் வாழ்க்கையின் பலன் இப்போதுதெரியா தல்லவா!

லக்ஷ்மீ! இந்த சம்பவங்களை நேரில் பார்த்த பிறகு நான் உன் தம்பியை ஹாஸ்டலில் சேர்க்கும் உத்தேசத்தை மாற்றி விட்டேன். தனியாக ஒரு சிறிய குடித்தனமே வைத்தாலும் வைத்து நமது மேல்பார்வையில் பையன்களைப் படிக்க வைக்கலாமேயன்றி இம்மாதிரி தான்தோன்றியாய்த் திரிவ தற்கு இடங்கொடுக்க நானும் உன் மாமாவும் விரும்பவே இல்லை. நமது விசாலம் பாட்டியைக்கூடக் கூட்டியனுப்பி சிறிய குடித்தனத்தையே வைத்துப் படிக்க வைக்கத் தீர்மானித்துவிட்டேன். "விளையும்பயிர் முளையிலே"...என் பார்கள். ஆரம்பத்திலேயே இத்தகைய வழியில் பாய்ந்து விட்டால் வாழ்க்கையே பாழாகிவிடுமல்லவா? இத்தகைய பிள்ளைகளைப் படிக்கவைத்துக் கடனாகிய பரிபவத்தைத் தீர்ப்பதற்காகவே சில பெற்றோர்கள் வரதக்ஷிணை வாங்கிப் பெருமைப்படுகிறார்கள். இந்தப் பெருமை உண்மையில் சிறுமை தான். வரதக்ஷிணை காலணாவாங்காமல் கல்யாணம் செய்தோம் என்றால் அதுதான் உண்மையான பெருமையாகும். இதைத் தான் நமது மகாத்மாஜி ஸேவா சங்கத்தில் பலரும் பேசி வற்புறுத்திவருகிறோம்.

லக்ஷ்மீ! தை வெள்ளிக்கிழமை விழாக்கள் இம்முறைசொந் தக் கட்டிடத்தில்தடபுடலாய் நடந்தேறியது. ஸ்பஷ்ட கான கலாமணி ஸ்ரீமதி சுலோசனா மகாதேவன் பாட்டு அத்புதமா யிருந்தது. காப்பி ராகத்தில் பாடிய பல்லவி முதல்தரமான எஸன்ஸ் காப்பியாகவே இருந்தது! ஸ்ரீமதி பாக்யலக்ஷ்மி வைத்யநாதனின் பிடிலும் ஸ்ரீமான் சுந்தரத்தின் ம்ருதங்கமும் வெகு பொருத்தமாய் அமைந்தன. கச்சேரி மிகவும் நன்றா யிருந்தது. அனேக புதிய உருப்படிகளை சுலோசனா உணர்ச்சி

யுடன்பாடிப் பரவசமுறச்செய்தார். 30உ யன்று ஸ்ரீமதி கிதையம்மாள் (கனகம்மாள் ஜகன்னுதாசாரியார்) தலைமையில் மகாத்மா அமரத்வமடைந்தநாள் தீபயாகம், கீதாபாராயணம் பஜனை.........முதலியவைகளுடன் நடந்தது. ஸ்ரீமதிகள் ஸரோஜாபாய், மைதிலி ஸ்ரீநிவாஸன், சுகந்தா, P. B ரங்க நாயகி, பத்மினி ஸ்ரீநிவாஸன், சுபத்ரா, வை. மு. கோ...... முதலியவர்கள் பேசினூர்கள். வழக்கப்படி ராஜாஜி ஹாலுக்கும் சென்று பஜனை செய்தார்கள். 31-க் தேதியன்று திருப்பாவை யும்த்யாகராஜர் கீர்த்தனையும் போட்டிகள் நடந்தது. ஸ்ரீமதி C. ஸரஸ்வதிபாய், ஸ்ரீராஜரத்னம்மாள், மைதிலிஸ்ரீநிவாஸன் மூவரும் நீதிபதிகளாயிருந்து நடத்தினூர்கள். பெரியவர்களில் பவானி கணேசன் முதல் பரிசும், பத்மஜா இரண்டாம் பரிசும், பூமாதேவி மூன்ருவது பரிசும்; சிறியவர்களில், G. P. கமலா திருப்பாவை, தியாகராஜர் இரண்டிலும் முதல் பரிசு. திருப் பாவையில் T. V. லக்ஷ்மி, இரண்டாவது. புஜ்ஜம்மா, மூன்ரு வதும் கீர்த்தனையில் கல்பகம் இரண்டாவதும், S. லக்ஷ்மி, K. V. சகுந்தலா மூன்ருவதும். அபிமானப்பரிசு குமாரி ராதா வுக்குத் திருப்பாவையிலும் N. விசாலத்திற்குக் கீர்த்தனை யிலும் வந்தது.

8-க் தேதியன்று பேராசிரியர் ஸ்ரீமான் P. சாம்பமூர்த்தி யவர்களின் தலைமையில் த்யாகராஜர் தினம் கொண்டாடப் பட்டது. தலைவர் மிகமிக ஸ்வாரஸ்யமான விஷயங்களை வெகு ரஸமாகப் பேசினூர். போட்டியில் ஜெயித்தவர்களுக்கெல்லாம் பரிசுகளை வழங்கினூர். சென்ற வருஷம்போல் கலாகாமேச்வரி கோயிலில் ராதாக்ருஷ்ண பஜனை சபையின் ஆதரவில் நம் சங்கம் 3 தினங்கள் ஸ்ரீகளுக்காகப் ப்ரத்யேக பஜனையுடன், ஸ்ரீமதிகள் வை. மு. கோ., வஸுமதி, குகப்ரியை, இந்திரா மதுரை, சகோதரி சுபலக்ஷ்மி, ருக்மிணியம்மாள்முதலியோர் தலைமை வகித்துப் பேசினர். கைங்கர்யம் சிறப்பாக நடந்தது.

சங்கத்தின் கட்டிட நிதிக்காக காயனபடு கீர்த்தனபடு ஹரிகதாகலாநிதி ஸ்ரீமதி ஸி. ஸரஸ்வதிபாய் அவர்கள் 13-க் தேதியன்று ராமதாஸ் சரித்திரம் ஹரிகதா காலக்ஷேபம் செய்தார். அடாடா! அன்று கதை அமைந்த அழகைக் கேட்டவர்கள் பூரித்து மெய்மறந்தார்கள்! கேளாதவர்கள் துரதிருஷ்டம் பிடித்தவர்கள் என்ருல் மிகையாகாது. சங்கத் தின் நன்மைக்காக அந்தம்மாள் தனது கைங்கர்யமாய்க் கதையைச் செய்து பேருதவியளித்தார்கள். சுமார் 30 வஷருத் திற்கு முன்பு கதை எப்படி இருந்ததோ, அதைவிட இன்னும் ருசிகாமாய் அத்புதமாயமைந்தது. கதையைப் பாராட்டி அன்று தலைமைவகித்த ஸ்ரீமான் பாணினிராவ் அவர்களும், ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமி, சகோதரி சுபலக்ஷ்மி முதலியோரும்பேசினூர்கள். பின்னணிகீதமும் மிகவும் நன்ருக இருந்தது.

[தொடர்ச்சி: ராப்பர் 3-ம் பக்கம்]

# குணக் குன்று

வை. மு. கோ.

**109-வது நாவல்**

## 5

மேலும் சிறிது நேரத்திற்கெல்லாம் வனஜா சிரித்துக் குதித்து விளையாடியவாறு வெகு குஷியாக மாடிக்கு ஓடி வந்து, "அண்ணீ! அண்ணீ! ஊம்!...கிளம்பு!...அண்ணன் புதுக்காரில் நம்மைச் சினிமாவுக்கு அழைச்சிக்கிட்டு போகப் போகிறதாம்! பலே ஜோரான சினிமா!" என்று லக்ஷ்மியின் கைகளைப் பிடித்துக்கொண்டு குதித்தாள்.

லக்ஷ்மி, அன்புடன் வனஜாவை அணைத்தபடியே, தனது குழப்பத்தை எல்லாம் அடக்கிக்கொண்டு, "தங்கச்சி! சினிமாவுக்கா போகவேண்டும்? ஊஹூம்?...எனக்கது பிடிக்கவே பிடிக்காது. நான் சினிமாபோகிற வழக்கமே இல்லே. ஏன்?... எங்க வீட்டில் யாருமே போகமாட்டார்கள். அதிலும் சின்ன பெண்கள் சினிமா பார்க்கவேகூடாது என்று எங்கம்மாள் எங்களைக் கட்டுதிட்டம் செய்துவைப்பாள். அப்படி உங்க அம்மா செய்யமாட்டாளா?......என்று கேட்டாள்.

வனஜா முகத்தைச் சுளித்துக்கொண்டே, "என்ன அண்ணீ! ஏதோ வரட்டு வேதாந்தம் பேசுகிறாய்! சின்னப் பெண்கள் சினிமா பார்க்கக்கூடாதென்று யார் சொன்னது? ...எங்கம்மாவுக்கு சினிமா என்றால் உசிராயிற்றே! சோறு தண்ணீர்கூட வேண்டாம்! சினிமா பார்த்துக்கொண்டே இருப்பாள்! ஏதேது...நீவந்து அந்த ஆனந்தத்தின் வாயில் மண்ணைப் போட்டுவிடுவாய்போலிருக்கிறதே! சரி! சரி! நான் போய் அம்மாவிடம் சொல்லிவிடுகிறேன்" என்று குதித்துக் கொண்டே ஓடினாள். லக்ஷ்மி தடுத்தும் நிற்கவில்லை. "இதென்ன சினிமா பைத்தியமோ தெரியவில்லையே! உம்...வீட்டிலுள்ள பெரியவர்களால்தான் இந்த ஆசை விஷம்போல் குழந்தைகளுக்கு வளருகிறது. இவர்கள்மேல் குறைசொல்லிப் பயனென்ன?" என்று எண்ணியபடியே படுக்கையில் படுத்தாள்.

மிக்க உத்ஸாகத்துடன் சேகர் சிரித்துக்கொண்டே வந்து அன்பு ததும்ப, "லக்ஷ்மீ! நீ கவலைப்படவேவேண்டாம். வனஜாவை ஒரு நொடியில் சமாளப்படுத்திவிட்டேன்.... ஓரே குஷியாகக் குதிக்கிறாள். அவள் செல்லப் பெண்ணல்லவோ, லக்ஷ்மீ! கோபமும் ஒரு நொடியில் வருகிறது; அப்படியே ஒரு க்ஷணத்தில் சூரியனைக் கண்ட பனிபோல் அது

பறந்தும் விடுறது; லக்ஷ்மீ உடனே கிளம்பு!...என்று முடிப்பதற்குள், லக்ஷ்மி ஒரு மாதிரியாக முகத்தைச் சுளித்துக் கொண்டு பதில் பேசாமலிருந்தாள்.

அடுத்த க்ஷணமே தான் செய்வது தவறு; கணவனின் மனது நோகும்...என்றதை உணர்ந்து, "ஸ்வாமீ! மன்னிக்க வேண்டும்; நான் என்றுமே சினிமா மோகத்தில் சிக்கியவளல்ல. இன்னும் கேட்கப்போனால் என்னுடைய இந்த வயது வரையில் கணக்கெண்ணி மூன்றே சினிமாக்கள்தான் நான் பார்த்திருக்கிறேன். அதுவும் புராண கதைகள்.

இடைமறித்து, "என்ன! என்ன! மூன்று சினிமாக்கள் தான் பார்த்திருக்கிறாயா? போயும்போயும் புராணபடங்களா பார்த்திருக்கிறாய்? இதென்ன லக்ஷ்மீ? உனக்கு சினிமாக் கலையே பிடிக்காதா?......என்று கேட்டான், சேகர்.

லக்ஷ்மி:—கலைக்கும் சினிமாவுக்கும் தற்கால உலகத்தில் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்யாஸமல்லவா இருக்கிறது! கலையின் பெயரால் சில விஷயங்களைச் சொல்வதுகூட பிசகு என்று எங்கப்பா அடிக்கடி சொல்வார்...புராண படமா பார்த்தாய்?...என்று வியப்புற்றுக் கேட்பதையும் நான் வரவேற்கிறேன். அந்த புராண படத்தைப் பார்ப்பதற்குமுன்பு, மற்ற சமூகக் கதைகள் என்கிற ஆபாஸப் படங்களைப்பார்ப்பதைவிட புராண படமே பார்கலாம் என்கிற மனோபாவத்துடன்தான் போனோம். அதிலும் எனக்கு வெறுப்பும் ஏமாற்றமுமேதான் கிடைத்தது. ஸ்ரீராமன் என்கிற பெயருடன் ஒரு சோம்பேறி தடியனும், சீதை என்கிற பெயருடன் ஒரு மூதேவியும் வந்து நின்றபோது, எனக்கிருந்த ஆத்திரம் எப்படித்தான் பொங்கியது தெரியுமா? கண்ணால் பார்க்காமல் புத்தகத்தில் படித்தும் பெரியவர்கள் வாயிலாகக் கேட்டும் ஏதோ ஒருவகையான உருவங்களை மனக்கண்முன்பு கற்பனை செய்து கொண்டு பக்தி ச்ரத்தையுடன் வழிபடவும் விஷயத்தில் மனத்தைச் செலுத்தி உத்ஸாகத்துடன் க்ரகிக்கவும் செய்கிறோம்; அதுவே சிறந்த மார்க்கம் என்று தோன்றுகிறது. கண்ணால் பார்த்தபிறகு, இச் சோம்பேறி மடையனையா ஸர்வ வ்யாபியான ஸ்ரீராமசந்திரன் என்றும், ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா என்றும் எண்ணி மகிழ்வது? சீச்சீ! இம்மாதிரி கண்ணால் ஒரு அஸங்கிய உருவத்தைப் பார்த்து ஒன்றான உருவத்திற்கே பங்கத்தை விளைவிப்பதைவிட, பார்க்காமலிருந்துவிடுவதே நலம்; கற்பனை உருவத்தின் பலமே பக்தியை வளர்க்கும். இத்தகைய கோரஸ்வருபங்களைப் பார்க்காதிருப்பதே மேல். மனத்தில் ஊன்றிக்கிடக்கும் நல்ல எண்ணங்கள்கூட மறைந்துவிடும்போல் தோன்றுகிறது!...என்றெல்லாம் என் மனத்தில் கலவரமும் வெறுப்பும் உண்டாகிக் குழப்பியது...

சேகர்:—லக்ஷ்மீ!...ஏதேது.....நீ ஒரு பெரிய பத்திரிகை விமர்சகர்போல் பேசுகிறாயே? நீ கூறும் ஒவ்வொரு ஆணித் தரமான வார்த்தைகளுக்கும், அப்பழுக்கற்ற கருத்து நிறைந்த உண்மைக்கும், எதிர்த்துப் பேசவே இடமில்லையே! அடேடேடே!...நீ ஸாமான்யப்பட்டவளேயல்ல, லக்ஷ்மீ!... சரி!...அப்படியானால்...

லக்ஷ்மி:—அப்படியானால் என்ன? சினிமாவே எனக்குப் பிடிக்காது. வாழ்க்கைப் பாதையிலுள்ள கரடுமுரடானசிக்கல் களை, முட்களைக் களைந்தெறிந்து தூய சன்மார்க்க வழியில் திருப்பிச் செப்பனிடக்கூடிய சிறந்த படங்கள் ஆயிரத்திற்கு ஒன்றுகூட இல்லை என்று நான் திட்டமாகச் சொல்வேன். அத்தகைய படங்களைப் பார்ப்பதால் அனர்த்தம் விளையுமே யன்றி நன்மை யொன்றும் கிடையாது என்பது எங்கள் குடும்பத்தின் அபிப்ராயம். மேல் சொல்லிய நல்ல முறையில் சிறந்தபடம் நம் தமிழ்நாட்டிற்கும் ஒரு கடுகளவு நல்ல பாக்ய மிருந்து வருமானால் அன்று போய்ப் பார்க்கலாம். அது வரையில் இதுவிஷயத்தில் தயவுசெய்து என்னை வற்புறுத்தக் கூடாது. அதோடு இத்தகைய குப்பைத்தொட்டிப் படங் களுக்கு இந்தச் சின்னஞ்சிறுமியை அழைத்துச் செல்லவுங் கூடாது. அந்த ஆசையை இளந்தளிர் உள்ளத்தில் பரவச் செய்து வளரவைக்கவுங் கூடாது என்று நான் கண்டிப்பாய்ச் சொல்கிறேன்.

சேகர்:—பலே! பலே! லக்ஷ்மீ! போட்டாலும் ஒரு உத்திரவு ப்ரமாதமாய்ப் போட்டுவிட்டாயே! உன்னை மந்திரி சபையில் முக்யமான கூட்டத்திற்கு அதிகாரியாக்கிவிட்டால் கருக்காக வேலை செய்வாய் போலிருக்கிறதே! லக்ஷ்மீ! சினிமா என்றால் எப்படி இருக்கவேண்டும்? எப்படி இருந்தால் பலன் உண்டு? பொதுமக்களுக்குப் பிடித்தமானது எது?...என்பவைகளைப் பற்றி ஒரு கட்டுரை எழுது; அதை நான் பத்திரிகையில் போடச் செய்கிறேன்...

லக்ஷ்மி.—(கடகடவென்று சிரித்தபடியே) அடேயப்பா! ப்ரம்மாண்டமான ப்ளான்தான் போடுகிறீர்கள்! நானும், யோக்யதை இருக்கிறதோ இல்லையோ?...அவரவர்கள் தம்தம் அபிப்ராயத்தை வெளியிட்டுப் பேசவும் எழுதவும் ஓரளவு உரிமை இருக்கிறது....என்று எழுதிவிடுகிறேன்; நீங்களும் அனுப்பிவிடலாம். ஆனால் தற்கால பத்திரிகையுலக தர்மத்தைப்பற்றி உங்களுக்குத் தெரியாதுபோலும்!...அடிக்கடி எங்கப்பாவும் அவருடைய நண்பர்களும் பேசிக்கொள்வதை நான் கேட்டிருக்கிறேன். பத்திரிக்காரர்களுக்கு வேண்டியவர்களானால் ஆகாயத்தில் தூக்கி வைத்துப் பறையடித்து எழுதுவார்கள். அவர்களிடம் சாக்கு இருக்கட்டும், இல்லாமல்

போகட்டும்; "ராஜா மெச்சிவிட்டால் அவள் ரம்பைதான்" என்கிற பழமொழிப்படிக்கு நடத்திவிடுவார்கள்! பிடிக்காதவர்களோ, ஏழைபாழைகளோ, சரக்கு இருந்தும் செல்வாக்கற்றவர்களோ...எது அனுப்பினாலும் குப்பைக் கூடைக்கு நிச்சயம் போய்ச்சேரும்! மிக்க ப்ரபலமாகி முன்னுக்கு வந்துவிட்டவர்களைக் கண்டால் பொறாமை, அஸூயை......இவைகளால் அவர்கள் அனுப்பியதைப் போடமாட்டார்கள். சில பத்திரிகைக்காரர்கள் தமது தர்மத்தை நழுவவிடாமல், ஒரே சமரஸமார்க்கமாய் இருக்கிறார்கள். இவைகளை எல்லாம்கூட நானறியாமலில்லை... என்றபொழுது, "அண்ணா!...அண்ணா! மணி என்ன ஆகிறது பாரு! சாப்பிட்டுவிட்டுக் கிளம்ப வேண்டாமா?" என்று வனஜா கிழே இருந்து கத்தினாள்.

சேகர்:—லக்ஷ்மீ! அப்போது என்ன செய்வது? இன்று போகாவிட்டால் வனஜாவுக்கு மட்டுமல்ல; அம்மாவுக்கே கோவம் வந்துவிடும். உனக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ... தயவுசெய்து எனக்காக இப்போதுமட்டும் வந்துவிடு... அம்மாவுக்கும் த்ருப்தியாகிவிடும்.

லக்ஷ்மி:—ஸ்வாமீ! மன்னிக்கவேண்டும்; படங்களின் பெயர்களைக் கேட்கும்போதே அருவருப்பாயிருக்கிறது. பெயர்களிலிருந்து ஒரு கவர்ச்சியும், அர்த்த புஷ்டியும் ஆழ்ந்த கருத்தும் இருக்கவேண்டாமா? எல்லாம் வெறும் பட்டாஸ் வெடிதான்!..."ஷோக் சுந்தரி" என்கிற பெயரைப் பார்த்தாலே வெறுப்பாக இல்லையா?...

சேகர்:—வெறுப்போ! விருப்போ!...இன்றுமட்டும் வந்துவிடு, லக்ஷ்மீ! எனக்கும் சற்று சினிமா பயித்தியம் உண்டு. இனிமேல் என் இதய ராணியின் உத்திரவுப்படிக்கு நான் திருந்திவிட முயற்சிக்கிறேன்...

லக்ஷ்மி:—என்ன? முயற்சிக்கப்போகிறீர்களா? முயற்சியே வேண்டாம். தீர்மானமாய் விட்டுவிடுவதாக சங்கல்பமே செய்துகொள்ளுங்கள். ஏதாவதொரு அபூர்வமான படம் எப்போதாவது வருமாயின் போய்ப்பார்க்கலாம். இன்று மட்டும் உங்களுடைய உத்திரவுக்குக் கட்டுப்பட்டு வருகிறேன். ஆனால் என் தேகநிலை சரியாய் இல்லாததால் அதிக நேரம் உட்காரமுடியாதென்று தோன்றுகிறது. முடிந்தவரையில் பார்த்துவிட்டு உடனே நான் கிளம்பும்போது என்னை அழைத்துவந்துவிடவேண்டும்......தெரிந்ததா?.....அதற்குச் சம்மதித்தால் நான் வருகிறேன்.

சேகர்:—தேவீ! உன் ஆக்ஞைப்படிக்கு நடக்கக் காத்திருக்கிறேன், புறப்படு!—என்றபோது வனஜா அவஸரப்படுத்திக்கொண்டு மாடிக்கே வந்து, "அண்ணா' இன்னும் நேரமாகவில்லையா? நான் உள்ளே வந்தால் திட்டுகிறாய். நீயோ

வெளியில் வரும் யோசனையே காணவில்லை...அண்ணா! மணியைப் பாரு—என்று பரக்கப் பரக்கப்பேசி வெளியிலேயே நின்றாள்.

வனஜாவின் அலங்காரத்தையும், தலையை வாரிச்செய்துள்ள பரிபவத்தையும், குச்சு காப்களுக்குள்ள புஸ்ஸென்ற ரோமத்தைப்போல் தலையைப் பரத்திவிட்டுக்கொண்டு,போலி அழகைப்பொருத்தமுறையில் செய்துகொண்டு உடம்பெல்லாம் தெரியும்படியான ஒரு டிஷ்யூ புடவையை அணிந்து, உதட்டிலும் கை நகங்களிலும் சிவப்புக் கலர் பூசிக்கொண்டு, முகத்தில் அஸல் மேகப்பு செய்துகொண்டு நிற்கும் காட்சியைக் கண்டதுதான் தாமதம்...லக்ஷ்மிக்குத் தூக்கிவாரிப்போட்டுக் குழப்பியது...இவள் சினிமா பார்க்கப்போகிறாளா? அல்லது இவளே சினிமா நக்ஷத்திரமாகிவிட்டாளா?...என்று தெரியவில்லையே! ஐயோ இதென்ன அங்லகாரம்?...இப்படிப்பட்ட சிங்காரத்துடனா வெளியில் செல்லத் தயாராகிவிட்டாள்?... என்று தாங்க முடியாத வியப்புடன் வனஜாவையும் தன் கணவனையும் மாறிமாறிப் பார்க்கிறாள்.

பலே கெட்டிக்காரப் பேர்வழியான சேகர், லக்ஷ்மியின் மனத்தில் உள்ள உணர்ச்சியை நொடியில் அறிந்துகொண்டு, முகத்தில் அசடு வழிய, வனஜாவையும் லக்ஷ்மியையும் மாறி மாறிப் பார்க்கிறான். இந்த நிமிஷம் வரையில் வனஜாவின் அலங்காரமே தன் கண்களுக்குக் கந்தர்வமாதோ! வன தேவதையே!...என்ற முறையில் அற்புதமாகவே தோன்றிப் பூரிக்கவும் செய்தது. ஆனால் லக்ஷ்மியைக் கல்யாணக் கோலத்திலும் அதற்குப் பிறகும் வெகு எளிய முறையில்—ஆனால் மிகக் கவர்ச்சிகரமான அலங்காரத்துடன்—அமரிக்கையாய்ப் பார்த்த பிறகு, இந்த நிமிஷம் வனஜாவின் கோலத்தில் சிறிது வெறுப்பும் வெட்கமும்கூடத் தோன்றிய அதிசயத்தை உணர்ந்தான்.

மேலே பெரிய சரிகைப் புடவை உடுத்தியிருக்கும் லக்ஷணத்தில் உள்ளே கட்டியுள்ள பாவாடையின் கலர், பூவேலை செய்துள்ள அழகு, லேஸ்கள் தைத்துள்ள சிங்காரம் முதலிய யாவும் பூர்ணமாகத் தெரியும் கோலத்தை இந்த நிமிஷந்தான் அவன் கண்களே காணக் கூசி வெட்கத்தால் தலையும் குனிந்தது! அதேபோல் சொக்காயின் கதியும் இருக்கும் கண்ணராவியை வர்ணிக்கவேண்டுமா?...

வனஜா மிக்க அழகிதான்; லக்ஷ்மிக்கு ஜோடியாய் நிற்கும் வனப்பு வாய்ந்தவள்தான்; எனினும் இத்தகைய ஒவ்வாத அலங்காரத்தினால் அழகு விருத்தியாவதாக எண்ணி மகிழ்ந்த சேகருக்கே இயற்கையழகு குறைவதாகத் தோன்றியது. லக்ஷ்மி என்கிற பெயருக்கு ஏற்றவாறு ஸ்ரீமகா

லக்ஷ்மியைப்போல் இயற்கையும் செயற்கையும் சேர்ந்த அழகிய—பொருத்தமான—அடக்கமான அலங்காரத்துடன் நிற்கும் லக்ஷ்மியின் சோபையும் வனப்பும் ஆயிரம் மடங்கு அதிகப்படும் அத்புதத்தை உள்ளூர உணர்ந்த சேகர் ப்ரமித்தான். தன் மனைவி என்கிற முறையில் அதீத ப்ரீதியுடன் இத்தகைய மாறுதலைக் காணவில்லை. கல்யாணத்தன்று லக்ஷ்மியைச் சேர்ந்தவர்கள் சிலரும் லக்ஷ்மியின் சிநேகிதைகள் சிலரும் செய்துகொண்டு வந்த அலங்காரத்தைப் பார்த்த அன்றே இந்த அபிப்ராயம் சேகரின் மனத்தில் சிறு விதைபோல் விழுந்தது. அந்த விதை இப்போது அழகிய முளைவிட்டுத் துளிர்க்கத் தொடங்கியது.

வனஜாவை நோக்கி, ''வனஜா!......கோபிக்காதேம்மா! இந்தப் புடவையும் அலங்காரமும் எனக்கு இப்போது பிடிக்கவே இல்லை. கல்யாணத்தன்று நம்மைச் சேர்ந்தவர்கள் சிலருடைய அலங்காரத்தையும் உனது இந்தச் சிங்காரத்தையுங் கண்டு அங்கு எத்தனை பேர்கள் பரிகாஸம் செய்தார்கள் தெரியுமா? அப்போது எனக்கே சிறிது வெட்கமாகத் தோன்றியது. இந்த டாம்பீக—அதீத நாகரீக—உடையை மாற்றி வேறு உடையை அழகாக அணிந்து வா, சீக்கிரம் போய் வா!.........என்று சிரித்தபடியே தங்கையைச் சாமாதானமாய்ச் சொல்லும்போது அவனுடைய தாயார் இவர்கள் எல்லோரும் ப்ரமிக்கும்படியான முறையில், வனஜாவுக்கு மேல் அவளைத் தோற்கடிப்பதுபோன்ற முறையில் சிங்காரம் செய்துகொண்டு வந்து நிற்கும் பயங்காரத்தைப் பார்த்த உடனே, லக்ஷ்மிக்கு அவளையறியாத சிரிப்பு வாயைப் பிய்த்துக் கொண்டு வந்துவிட்டது. சேகரன் அப்படியே தம்பித்துத் தலை கட்டிய நாகம்போல் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான்

சில குடும்பங்களில் பெண்களை மிகமிகச் செல்லமாக வளர்க்கும் முறையில் அவர்களுடைய பிற்கால வாழ்க்கையின் நிலைமையிலேயே மிகவும் பரிதாபப்படக்கூடிய விதம் அமைந்து விடுகிறது. இப்படிப் பெற்றுவளர்த்தார்களே!...என்று புக்ககத்தினரும்...இப்படி என்னை வளர்த்து நாசம்செய்துவிட்டார்களே...என்று தானேயும் மனம் நோகவும் ப்ரத்யக்ஷமாகப் பார்த்திருக்கிறோம். அதேபோல் வனஜாவின் அபரிமிதமான செல்வத்தின் மிகுதியால் தன்னை வேறு உடைமாற்றும்படி அண்ணன் சொல்லிய உடனே பாணம் பாய்ந்து துடிக்கும் ஆத்மாவைப்போல் ''அம்மா! அம்மாடீ! அண்ணன் சொல்றதைக் கேட்டியா? அண்ணி வந்து இன்னும் அரை நாழியாகல்லெ; இதுக்குள்ளாக அண்ணனிடம் அதிகாரம் செய்ய உத்திரவிட்டுவிட்டாம்மா!...நான் இந்த உடையில் வருவது அண்ணனுக்கு அவமானமாம்!''...

என்று ஒப்பாரிவைப்பதுபோல் கத்தியவாறு அலறுகிறாள்! ஆனால் கண்ணில் நீர் வந்தால் எங்கே கண் மை கலைந்து விடுமோ, முகத்தின் மேகப்பு அழிந்து வேஷம் போட்டது போலாகிவிடுமோ, உதட்டுக் காவி கலைந்து விகாரப்பட்டு விடுமோ, தலையின் வேஷங்களுக்குப் பங்கம்வந்துவிடுமோ!... என்கிற பயத்தினால் கண் கலங்காமல், அடித்தொண்டையினால் மட்டும் கத்தியவாறு உடம்பைப்போட்டு ஆட்டிக் காலை ‘தடால் தடால்’ என்று தரையில்தட்டி ஹதம் செய்வதைக் கண்டு சேகருக்கே பிடிக்காமல் மிகவும் கோபம் வந்துவிட்டது.

லக்ஷ்மிக்கு வனஜாவின் வார்த்தைகள் மனத்தில் உறுத்தியது. அதோடு தான் வீட்டில் காலை வைத்தவுடனேயே இத்தகைய தடபுடல்கள் உண்டாகி பிறருக்குத் தெரிந்தால் மிகமிக கேவலமாகி விடும்; குட்டு கோபியத்தை வளர்க்க வேண்டுமேயன்றி பிளவை உண்டாக்கக் கூடாது. வெகு நாட்களாக ஊறிப்போன விஷயத்தை ஒரு நிமிஷத்தில் மாற்றுவது சாமான்ய காரியமல்ல. ஆகையால் முள்ளில் விழுந்த சேலையை மெல்லமெல்லத்தானே எடுக்கவேண்டும்; அதுபோல இவர்களையும் மெல்லவே திருத்தச் செய்ய முயற்சிக்கலாம். பகவான் விட்டவழி...என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டு, உடனே தன் கணவனைக் குஷியுடன் பார்த்து, ஜாடை செய்தவாறு, “வனஜா! வாம்மா! அம்மா கிளம்புங்கள்! நான் இதோ தயார்!” என்று குசாலாகச் சொல்லிக் கொண்டே இருவரையும் இருகைகளால் பிடித்து இழுத்துக் கொண்டு சிறு குழந்தையைப்போல் நடந்தாள். சேகரனின் மனம் இக்காட்சியைக் கண்டு பூரித்தது.

## 6

சினிமாக் கொட்டகையில் ஓரே கூட்டம். அன்றுதான் அந்தப்படம் ஆரம்பமாதலால் அமர்க்களப்படுகிறது! சேகர், லக்ஷ்மி முதலியவர்களும் உயர்ந்த வகுப்பு டிக்கட்டுக்களை வாங்கிக்கொண்டு உள்ளே சென்றார்கள். செல்லும்போதே அங்குள்ள பலர் வனஜாவையும் அவள் தாயாரையும் ஏதோ புதுமையான பொருளைப் பார்ப்பதுபோல் பார்ப்பதும் விமர்சனங்கள் செய்து பேசுவதும்,...“டேய்! சினிமா நக்ஷத்திரம் போலிருக்கிறதுடா!......என்று வனஜாவைச் சுட்டிக்காட்டிப் பேசுவதும், லக்ஷ்மியின் கண்களில் படாமலில்லை, காதுகளில் கேளாமலில்லை. இதே எண்ணத்துடன்—அவமானத்துடன்—போவதினாலோ என்னவோ, லக்ஷ்மிக்கு இந்த விஷயங்களே ப்ரதானமாய்த் தெரிந்து தோன்றி மனத்தைக் குழப்பியது.

இன்றளவும் இதைப்பற்றி வித்யாஸமாய் எண்ணாதிருந்த சேகர் மனத்திலும் இன்று எதனாலோ இவ்விஷயங்கள் எல்லாம்

ஒரு வேற்றுருவங்கொண்டே பதிந்தது. அவன் காதிலும் இந்த இளப்பமான வார்த்தைகள் கேட்டு லக்ஷ்மியின் முகத்தைப் பார்த்தான்.

எல்லோரும் தம்தம் இடங்களில் அமர்ந்த பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் படம் ஆரம்பமாகியது. முதலில் காட்டப்படும் ஒரு புதிய செய்திச் சுருளில் சில சினிமா நக்ஷத்திரங்களைக் காட்டி அவர்களுக்குள்ள புகழையும் பொதுமக்கள் அவர்களுடைய தரிசனத்திற்காகக் காத்திருக்கும் கூட்டத்தையும் காட்டி, சினிமா நக்ஷத்திரங்கள் ஏதோ விளையாடுவதாயும் கண்காட்சியைப் பார்ப்பதாயும் ஜனங்கள் அவர்களைப் பார்ப்பதற்காக டிக்கட்டுக்கள் வாங்கிக்கொண்டு முண்டியடித்துச் செல்வதாயும் காட்டினார்கள்.

இந்தப் பாகத்தைப் பார்த்த வனஜா ஒரே கும்மாளமிட்டுப் பூரித்துப்போய், ‘‘ஐயோ! பிறந்தாலும் இப்படியல்லவா பிறக்கவேண்டும்! நாமும் பிறந்திருக்கிறோமே, எதற்காக?...அண்ணீ! அண்ணீ! அவளுடைய அழகைப்பாரேன்! ...அடேடே அவனைப் பாரேன்!...எப்படித்தான் மன்மதனைப் போல் இருக்கிறான்! ஆகா! அவன் சிரிப்பே ஒரு தனித்த அழகாயிருக்கிறது. இல்லையா?...பல்லைப்பாரேன்!...அடாடாடா! என்ன அழகான சரீரம்!...என்று தனக்குத்தானே வாய்விட்டுப் பெரியதாகக் கூறிக் கும்மாளமிடுவதைக் காண லக்ஷ்மிக்கு நெஞ்சம் பதைக்கின்றது. ஆத்திரமாக வருகிறது. இந்த வார்த்தைகளைத் தன் கணவனே நேரில் கேட்கும் பொருட்டுத் தான் மெல்ல நகர்ந்து அடுத்த சேரில் உட்கார்ந்து வனஜாவின் பக்கத்தில் தன் கணவனை உட்காரச் செய்தாள்.

சேகருக்கு இதுவரையில் தங்கையுடன்தான் சினிமா பார்த்தபோது தானும் சேர்ந்து வர்ணிப்பதும் தாளம் போட்டுப் பேசுவதும் தாயாரும் கூடவே சேர்த்துப் பேசுவதும் சகஜமாகவே தோன்றிய மனத்திற்கு, இன்று ஏதனாலோ ஒரு புதிய மாதிரியான வெறுப்பும், இம்மாதிரி பேசுவது மிகமிகக் குற்றம் என்றும் சடக்கெனத் தோன்றியது. வனஜாவின் உத்ஸாகமும் அவள் தாயாரின் சந்தோஷமும் போட்டாபோட்டியிட்டு உச்சஸ்தாயியில் நர்த்தனம் செய்கிறது. இந்த நிலையில் விளக்குப் போடப்பட்டு விட்டது. ‘‘பேஷ்! பேஷ்! என்ன ப்யூடிபுல் லேடீ! என்ன எக்ஸலெண்டு ஸ்டார்!’’...என்று தாயும் மகளும் மாறிமாறிப் பேசிக்கொண்ட சமயம், சேகர் அவர்களை விழித்துப் பார்த்தான். இதற்குள் மறுபடியும் விளக்கணைந்து படம் ஆரம்பமாகிவிட்டது.